# உள்ளவற்றை இழக்காமல் உச்சத்தை அடைவது எப்படி?

## (2 சாமுவேல் 8-12; 21; 23; 1 நாளாகமம் 11; 18-20; 23; 27)

புத்தகக் கடையில் சுயமுன்னேற்றம் என்ற பகுதியில் உள்ள புத்தகங்களில் பெரும்பான்மையானவை வெற்றிபெற்றவர்களாயிருப்பது எப்படி என்றோ அல்லது தோல்வியைச் சமாளிப்பது எப்படி என்றோ கூறுபவைகளாயிருக்கின்றன. முழுமையான வெற்றிக்கான சூத்திரம், வெற்றிபெறுதல் கலை, ஜெயிக்கப் பிறந்தவர், நீங்கள் மேன்மையடைய முடியும் மற்றும் ஒருபோதும் தவறாத வெற்றி முறைமை போன்றவை இவற்றின் தனிப்பட்ட தலைப்புகளில் உள்ளடங்குகின்றன. மன அழுத்தம், சோர்வு, சுயத்தைப் பற்றி தாழ்வாய் எண்ணுதல், மன அயர்ச்சி, கடினமான மக்கள், கோபம், திட்டுதல், பயம் மற்றும் துக்கம் ஆகியவற்றைச் சமாளித்தல் பற்றி (இந்தப்) புத்தகங்கள் கூறுகின்றன. வெற்றியைச் சமாளித்தல் என்பது பற்றி எந்தப் புத்தகமும் ஒன்றும் கூறுவதில்லை என்பது உறுதி.

ஆயினும், வெற்றியைக் கையாளுவதற்கான வழிகாட்டும் குறிப்புகள் என்பவை நமது மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது. பேரழிவு மோதும்போது, நாம் நமது மிகச் சிறந்த செயல்பாட்டைச் செய்கின்றோம். புயல்காற்று ஒரு பகுதியைத் தாக்கினால், பெருவெள்ளங்கள் பண்ணைகளையும் வீடுகளையும் அழித்தால், நெருப்பானது அயலகத்தில் உக்கிரமாய்ப் பற்றியெரிந்தால், நாம் பாதிக்கப்பட்டவர்களைச் சுற்றி (அவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன்) ஓடிவருகின்றோம். நாம் அவர்களுக்கு உதவுவதற்காக நமது காலத்தை, பணத்தை மற்றும் சக்தியைத் தியாகம் செய்கின்றோம். விஷயங்கள் நன்றாக இருக்கின்றபோது, நாம் போட்டியிடும் நண்பர்களாகி, உச்சத்திற்குச் செல்வதற்கான நமது வழியில் பிராண்டிக்கொண்டும் நகங்களால் கீறிக் கொண்டும் முன்னேறுகின்றோம், அப்போது மக்களைப் பயன்படுத்திக்கொண்டு பின்பு அவர்களைத் தூக்கியெறிந்து விடுகின்றோம்.

வெற்றி வருகின்ற போது, நாம் நமது எதிர்நோக்கை இழந்து போகின்றோம். அமெரிக்காவில் மக்கள் பொருளாதார சூழ்நிலை பற்றி முறையிட்டுக் கொண்டுள்ளோம், ஆயினும் நாம் (அமெரிக்கர்கள்) உலகத்தின் எஞ்சிய பகுதியில் உள்ளவர்களை விட 99 சதவிகிதம் மேம்பட்டவர்களாகவே இருக்கின்றோம். நாம் எவ்வளவு கடின வேலை செய்ய வேண்டி

*யுள்ளது என்று முறையிட்டுக் கொண்டிருக்கின்றோம், ஆனால் நமது தந்தையர்களை விட நாம் அதிக ஓய்வு நேரத்தைக் கொண்டுள்ளோம். பணம் மற்றும் ஓய்வு நேரம் ஆகியவற்றுடன் நாம் உண்மையில் "உச்சத்தை அடைந்துள்ளோம்,'' இருப்பினும் நம்மில் பலர் ''அடிப்பகுதியைத் தாக்குகின்றோம்" அல்லது "உள்ளவற்றை இழந்து போகின்றோம்."*

*வெற்றியை நாம் எவ்வாறு சமாளிக்க முடியும்? தாவீது எவ்வளவு வெற்றிகரமானவராயிருந்தார் என்று நாம் காண்கையில், நாம் நம் ஆத்துமாக்களை இழந்து விடாமல் வெற்றிகரமானவர்களாயிருத்தல் எவ்வாறு என்பதற்கான ஆலோசனைகளைப் பொறுக்கித் தேர்ந்தெடுப் போம். தாவீதின் எஞ்சிய ஆண்டுகளின் மீது பாவம் தனது நிழலைப் பரப்புவதற்கு முன்பு இருந்த மகிழ்ச்சியான நாட்களைப்பற்றி நாம் படிப்போம்.*

*தாவீது நிலைநாட்டிய பேரரசின்மீது நம் பாடத்தில் வலியுறுத்தம் செலுத்தப்படும். நாம் இந்த நிகழ்ச்சிகளில் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிட விரும்புவதில்லை. இந்த ஆண்டுகளும் சாலொமோனின் ஆளுகையின் முற்பகுதியும் யூதர்களைப் பொறுத்தமட்டில், "இஸ்ரவேலின் பொற்காலம்" என்றுதான் எப்போதும் கருதப்படுகின்றது. அதே வேளையில் நாம் இந்த நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் பற்றி அதிகமாகவும் வலியுறுத்தி விடக்கூடாது. பெரும்பாலான நிகழ்வுகளில், முழு நாடுகளையும் கீழ்ப் படுத்தும் செயல் ஒரு சில வசனங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது, இதற்கு நேர்மாறாக, பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவருதல் போன்ற ஆவிக்குரிய பாடக்கருத்துக்களுக்கு முழு அத்தியாயங்களும் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளன. வேதாகமம் இப்படிப்பட்டவைகளையே எதிர் நோக்கி காத்து வைத்துள்ளது.*

*ஆயினும், தாவீது - ஒரு போர்வீரர், தேசபக்தர் மற்றும் ராஜா என்ற வகையில் - ஒரு வெற்றியாளராயிருந்தார் என்ற உண்மை அப்படியே நிலைத்துள்ளது. அவர் தம் வெற்றிகள் பற்றிய பதிவேட்டை நாம் மறுகண்ணோக்கம் இடுகையில், வாழ்வில் மிகவும் இன்றியமையாதவற்றை இழந்து போகாமல் உச்சத்தை அடைய அவருக்கு பெலன் அளித்த - மற்றும் நமக்குப் பெலன் அளிக்கக் கூடிய - காரணிகளை நாம் உற்றுக் கவனிப்போம்.*

## தாவீது உச்சத்தை அடைந்தார்

*2 சாமுவேல் 8 முதல் 10ம் அதிகாரங்களில் தாவீது ராஜாவின் சாதனைகளின் பட்டியலானது ஒரு உச்சத்தை அடைகின்றது. இந்த அத்தியாயங்கள் தாவீதின் வாழ்வில் பின்தொடரவிருந்த மோசமான நாட்களுக்கு மேடையொன்றை அமைத்தன.*

### *நிலைநாட்டப்பட்ட ஒரு பேரரசு (2 சாமுவேல் 8; 21; 23; 1 நாளாகமம் 11; 18; 20)*

*2 சாமுவேல் 8ன் பெரும்பான்மையான பகுதியானது, தாவீதின் இராணுவ வெற்றிகளின் தொகுப்புரையாக உள்ளது. இந்த வெற்றிகளைப்*

*பற்றி நாம் வாசிக்கையில், பின்வரும் மூன்று உண்மைகளை நினைவில் வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது: (1) தாவீது, நீண்ட காலத்திற்கு முன்பு நாட்டைப் பற்றி ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தத்தை (ஆதி. 15:18-21) நிறைவேற்றிக் கொண்டிருந்தார். (2) தாவீது நீண்ட நாட்களுக்கு முன்பு யோசுவா தொடங்கியிருந்ததை (யோசு. 1:4; 21:43) முடித்துக் கொண்டிருந்தார். (3) தேவலாயம் கட்டியெழுப்பப்படும் முன்பு அவசியமாயிருந்ததென்று தேவன் உரைத்த சமாதானத்தைத் தாவீது நிலைநாட்டிக் கொண்டிருந்தார்.*

*மேற்கு திசைக்கு. இராணுவத்தின் வெற்றி தொடக்கமானது இஸ்ரவேலரின் நீண்ட கால விரோதிகளான பெலிஸ்தியாவில் தொடங்கிற்று (வரைபடத்தைக் காணவும்). "இதற்குப் பின்பு[1] தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, அவர்களின் முக்கிய நகரமான[2] காத்[3] என்ற நகரை [மேத்தேக் அம்மாவை] ப் பிடித்துக் கொண்டான்" (2 சாமு. 8:1).*

*பெலிஸ்தருக்கு எதிராகத் தாவீது எண்ணிறந்த யுத்தங்கள் செய்தார். சுற்றிலும் இருந்த நாடுகளுடன் தாவீது செய்த யுத்தங்களில் குறிப்பிட்ட சிலவற்றை நாம் ஆராய்வோம். தாவீது சமஸ்த இஸ்ரவேலின் மீதும் ராஜாவாக முடிசூட்டப்பட்டபோது (2 சாமு. 5) இந்த நாட்டாருக்கெதிராக நடத்திய திட்டவட்டமான இரு யுத்தங்களைப் பற்றி நாம் ஏற்கனவே வாசித்தோம். 2 சாமுவேல் புத்தகத்தின் முடிவில் உள்ள பிற்சேர்க்கையில் பெலிஸ்தருடனான எதிர்ப்பு நடவடிக்கை நிகழ்வுகள் பலவற்றின் விவரங்களை நாம் காண்கின்றோம்.[4]*

*2 சாமுவேல் 21:15-22 வசனப்பகுதிகள், நான்கு பெலிஸ்திய இராட்சதர்கள் கொல்லப்பட்ட நான்கு யுத்தங்களைப் பற்றிக் கூறுகின்றது, இவர்கள் நால்வருமே கீர்த்தியற்ற கோலியாத்தின் உறவினர்களாய் இருந்தார்கள் என்பது உறுதி. முதலாவதில், யுத்தம் நீட்டிக்கப்படுகையில், தாவீது சோர்வுற்றார். ("பட்டயம் வழக்கத்தை விடக் கனமாயிருப்பது ஏன்? நான் வழக்கம் போல விரைவாய் அசைய முடியாதது ஏன்? நான் ஒன்றும் கிழவனாகி விடவில்லையே? நிச்சயமாக இல்லை" என்று அவர் முணுமுணுப்பதை நான் கற்பனை செய்கின்றேன்) இஸ்பிபெனோப் என்ற "இராட்சத புத்திரரில் ஒருவன்" (2 சாமு. 21:16) தாவீது விடாய்த்துப் போயிருந்ததைக் கண்டு, அந்த "இராட்சதர்களைக் கொல்பவனை" தான் கொலை செய்து அதன் மூலம் தனக்குப் பேர் ஏற்படுத்திக்கொள்ள முடிவு செய்தான். அவன் தனது கனத்த ஈட்டியுடனும்[5] கூர்மையான முனையுடைய பட்டயத் துடனும் (அது ஒரு "புதிய பட்டயமாயிருந்தது"; 2 சாமு. 21:16) ராஜாவை நோக்கி ஓடி வந்தான். யோவாபின் சகோதரனும் குற்றத்தில் அவருக்குக் கூட்டாளியுமாய் இருந்த - எப்பொழுதும் எவனையாவது கொல்ல வேண்டும் என்று விருப்பமுற்றிருந்த (1 சாமு. 26:6-9; 2 சாமு. 16:8, 9; 19:21) - அபிசாய், நடந்தது என்ன என்பதைக் கண்டு தாவீதின் அருகில் ஓடிவந்தார். இப்பொழுது அவர் விரோதியைக் கொல்வதற்குத் தாவீதின் அனுமதியைக் கேட்டுக்கொண்டிருக்கவில்லை; அவர் உடனே செயல்பட்டார். (இவர் நிலைத்த தலைவலியாக இருந்தாலும் தாவீது எப்போதும் இவரைத்*

*தம்மருகில் வைத்திருந்தது எதற்கு என்ற உட்கண்ணோட்டத்தை இது நமக்குத் தருகின்றது.)*

*தாவீதின் (அபாயத்தின் அருகாமையில் இருந்து அழைத்த) நெருக்கமான அழைப்பு அவரது மனிதர்களைப் பதட்டம் அடையச் செய்தது. அடுத்த முறை அவர்கள் அவரை வீட்டிலேயே இருக்கும்படி வற்புறுத்தினார்கள்: "இஸ்ரவேலின் விளக்கு அணைந்துபோகாதபடிக்கு, நீர் இனி எங்களோடே யுத்தத்திற்குப் புறப்படவேண்டாம்" (வ. 17) என்று அவருக்கு ஆணையிட்டுக் கூறினார்கள். இது பரிசுத்த ஸ்தலம் என்ற இருட்டறையில் எரிய வைக்கப்பட்ட பொன் குத்துவிளக்கிற்கான குறிப்பாயிருக்கலாம். தாவீது இஸ்ரவேலின் மாபெரும் ஆதார மூலம் என்று அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.*

*இரண்டாவது யுத்தத்தில், ஒரு இஸ்ரவேல் படைவீரர் "சீபேக்காய் இராட்சத சந்ததியான சாப்பை" வெட்டிப்போட்டான் (வ. 18). மூன்றாவது யுத்தத்தில், தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவர் (2 சாமு. 23:24), கோலியாத்தின் நெருங்கிய உறவினன் ஒருவனை[6] வெட்டிப்போட்டார். நான்காவது யுத்தத்தில், ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு காலிலும் ஆறு விரல்களைக் கொண்ட ஒரு இராட்சதனை தாவீதின் சகோதரர் (சிமெயாவின்) மகன்களில் ஒருவர் அவனை வெட்டிப்போட்டார் (வ. 20, 21).*

*மேலும், தாவீதின் ''பராக்கிரமசாலிகளின் பலத்த செயல்கள்'' அவர்களின் கொள்ளைகள் ஆகியவற்றில் பெரும்பான்மையானவை 2 சாமுவேல் 23ல் பெலிஸ்தருடன் நிகழ்ந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ள யுத்தங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஒருமுறை இஸ்ரவேலர்கள் பெலிஸ்தர்களுடன் யுத்தம் செய்து கொண்டிருந்தபோது, ஒரு போர் வீரனைத் தவிர மற்ற இஸ்ரவேலர்கள் யாவரும் பின்வாங்கி விட்டார்கள். இவர் ஓய்ந்திருக்க மறுத்து, "தன் கைசலித்து, தன் கை பட்டயத்தோடும் ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டினான்." இவரது வீரத்திற்கு வெகுமதியளித்து, "அன்றையதினம் கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்" (வ. 10). இன்னொரு வேளையில், பெலிஸ்தர் களுடன் இஸ்ரவேலர் யுத்தம் பண்ணுகையில் ஒவ்வொருவரும் ஓடிவிட, ஒரு இஸ்ரவேல் வீரன் யுத்தகளத்தில் நின்று சிறுபயறு விளைந்த நிலத்தைக் காப்பாற்றினான்! மீண்டும் ''கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடத்தினார்'' (வ. 12).*

*தாவீதின் வாழ்வில் நடந்த, நம் இதயத்தை மிகவும் தொடக்கூடிய வரலாறுகளில் ஒன்று பெலிஸ்தர்களோடு நடந்த ஒரு யுத்தத்தில் நடை பெற்றது. தாவீதின் சொந்த ஊரான பெத்லகேமில் பெலிஸ்தர்கள் ஒரு தாணையத்தை வைத்திருந்தார்கள். தாவீதும் அவரது மனிதர்களும் அந்த நகருக்கு வெளியே முகாமிட்டிருந்தார்கள். தாவீதும் பெத்லகேமைப் பற்றி நினைக்கையில், அவர் வீட்டு நினைவால் ஏற்படும் துயரத்தால் அவதிப் பட்டார், தமது சிந்தையை உரக்கப் பேசினார்: "பெத்லேகேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின்மேல் ஆவல்கொண்டு: என் தாகத்திற்கு கொஞ்சந் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்றான்"*

*(2 சாமு. 23:15). அது ஒரு வேண்டுகோளாயிருக்கவில்லை; தாவீது முன்பு தாம் எளிமையாயிருந்த நாட்களில் குடித்ததுபோல இப்போது குடிப்பதற் கான தமது விருப்பத்தை மட்டும் வெளிப்படுத்தினார். இருப்பினும், அவரது விருப்பம் அவர் அருகில் நின்றிருந்தவர்களுக்கு கட்டளையாயிருக்கு மளவுக்கு அவர்களால் அவர் அதிகம் அன்புகூரப்பட்டார். தாவீதின் "மூன்று பராக்கிரமசாலிகளான மனிதர்கள்" பெலிஸ்தர்களுக்குள்ளாகத் தங்களுக்கு வழியைப் போராடி பெற்றுக் கொண்டு, அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு, நகரை விட்டு வெளியே வரத் தங்கள் வழியை (மீண்டும்) போராடிப் பெற்றுக் கொண்டு, தங்கள் தளபதியினிடம் தண்ணீரைக் கொண்டு வந்தார்கள்.*

*அவர்கள் தாவீதுக்கு முன்பாக தரையில் விழுந்து வணங்கி, முனை வரையில் நீர் ததும்பும் தண்ணீர் பாத்திரத்தை அவருக்கு அளிப்பதை நான் (மனக் கண்ணினால்) காண்கின்றேன். அவர்களின் உடைகள் கிழிந்து இரத்தமயமாகி இருந்திருக்கும், அவர்களின் உடல்கள் முழுவதும் இரணமாகி இருந்திருக்கும் - இவை யாவும், அவர்கள் தங்கள் அன்பார்ந்த தலைவருக்கு ஒரு கலசம் தண்ணீர் கொண்டு வருவதற்காக, அவர்களுக்கு ஏற்பட்டதாயிருந்தது. தாவீது உணர்வெழுச்சியால் மேற்கொள்ளப் பட்டார். அவர் அந்தப் பாத்திரத்தை எடுத்து, தமது மனிதர்களின் உயிரை விலையாகப் பெறக்கூடியதாக அதிலிருந்த தண்ணீரைக் குடிக்க மறுத்து விட்டார். அவர் அந்தத் தண்ணீரை யெகோவாவுக்குக் காணிக்கையாகத் தரையில் மெதுவாக ஊற்றிவிட்டார். தாகம் நிறைந்த பூமியானது அந்தத் தண்ணீர்த் துளிகளைக் குடித்தபோது அவர், ''கர்த்தாவே, தங்கள் பிராணனை எண்ணாமல் போய்வந்த அந்த மனுஷரின் இரத்தத்தை குடிக்கும் இந்தச்செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக'' என்று கூறினார் (வ. 17). தாவீது தம் மனிதர்கள் பற்றிக் கூறிய இந்தப் பாராட்டுரையானது விரைவில் மறக்கப்படாததாக இருந்தது.*

*பெலிஸ்தரின் மீதான வெற்றிக்கு மற்ற உதாரணங்களும் தரப்பட முடியும். இங்கு ஒரு சில வார்த்தைகளில் எவ்வளவு விஷயங்கள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்து கொள்ள இயலும் படியாகவே இவைகள் பட்டியலிடப்பட்டுள்ளன: "... தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, ..." (2 சாமு. 8:1). மற்ற நாடுகளின் மீது தாவீது பெற்ற வெற்றிகளைக் குறித்து நாம் விரைவாய் ஆராய்கையில் இதை நீங்கள் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இரத்தம், வியர்வை மற்றும் கண்ணீர் ஆகியவை ஒவ்வொரு வசனத்தையும் ஊறச் செய்து நனைத்துள்ளன. தாவீதின் பேரரசு நிலைநாட்டப்படுதல் குறித்து, "தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி'' என்ற வார்த்தைகள், தாவீது மேற்கில் இருந்த தமது விரோதிகளை வெற்றி கொண்டார் என்று குறிப்பிடுகின்றன.*

*கிழக்கிற்கு. 2 சாமுவேல் 8:2ல் தாவீது கிழக்கில் இருந்த தமது விரோதிகளை வெற்றி கொண்டார் என்று நாம் காண்கின்றோம்:*

*அவன் மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும்*

*பணியப்பண்ணி, அவர்கள்மேல் நூல்போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோட வைத்தான். இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள்.*

மோவாபியர்கள் என்பவர்கள் ஆபிரகாமின் சகோதரன் மகனான லோத்தின் சந்ததியாராய் இருந்தார்கள்.[7] மோவாபிய நாடானது உப்பு(சவ)க் கடலின் கிழக்கு-தென்கிழக்குப் பகுதியில் உடைந்துபோன நாட்டையும் பாலைவன நிலங்களையும் கொண்டதாயிருந்தது. வசனம் 2, நம்மால் பதில் தர இயலாத கேள்வியொன்றைத் தூண்டுகின்றது. ஏவுதல் பெற்ற பதிவேட்டைப் பொறுத்தமட்டில், மோவாபியர்களுடன் தாவீதின் உறவுமுறையானது நன்றாகவே இருந்துள்ளது. தாவீது மோவாபைச் சேர்ந்த ரூத்தின் கொள்ளுப் பேரனாக இருந்தார் (ரூத் 4:17-22). அவர் தேடப்பட்டவராகத் திரிந்து கொண்டிருந்த போது, தமது பெற்றோர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களை மோவாபிய அரசரிடத்தில் ஒப்புவித்திருந்தார் (1 சாமு. 22:3, 4). இதெல்லாம் இப்படி நடந்தும்கூட, தாவீது தோல்வி அடைந்த மோவாபியரை, வேறு எந்த நாட்டிற்கும் தாம் காண்பிக்காத அளவு கொடூரத்துடன் நடத்தினார்,[8] அவர்களில் மூன்றில் இரண்டுபங்கு ஆட்களைக்[9] கொல்லுவித்தார். இதைச் செய்யும்படி அவரைத் தூண்டியது எது? "இவர்கள் மோவாபிய அரசனிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்த தாவீதின் பெற்றோர்களையும் குடும்பத்தையும் கொலை செய்திருந்தனர் என்பதே இம்மக்களுக்கெதிரான இந்தக் கொடுமைக்குக் காரணமாயிற்று என்று யூத எழுத்தாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்."[10] ஒருவேளை இவ்வாறு நடந்திருக்கலாம்; ஒருவேளை இவ்வாறு நடக்காமலும் இருந்திருக்கலாம். தாவீதின் இந்தச் செயலுக்கான காரணம் எதையும் நாம் அறிவதில்லையாதலால், இச்செயல் நம்மை வெறுப்புக்குள்ளாக்கினாலும், தாவீது இதைச் செய்தது சரியா தவறா என்று நாம் உறுதிப்படக் கூற இயலாது.

தாவீது, மோவாபு நாட்டிற்கு நேர் வடக்கே இருந்த, யோர்தான் நதியின் கிழக்குப்பகுதியில் இருந்த பாலைவனக் குடிகளான அம்மோனியர்களையும்[11] தோற்கடித்தார். மோவாபியர்களைப் போலவே அம்மோனியர்களும் லோத்தின் சந்ததியினராகவே இருந்தார்கள்.[12] இவ்விதமாக இஸ்ரவேலருக்குக் கிழக்கில் இருந்த விரோதிகள் கீழ்ப்படுத்தப்பட்டார்கள்.

*வடக்கிற்கு.* இப்பொழுது நாம் தாவீது வடக்கில் பெற்ற வெற்றிகளை நோக்கி நம் கவனத்தைத் திருப்புவோம்: "ரேகாபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக் கொள்ளப்போகையில், தாவீது அவனையும் முறிய அடித்து" (2 சாமு. 8:3). சீரியாவின் பாகமாயிருந்த சோபா என்பது தமஸ்குவுக்கு வடக்கில் இருந்த ஒரு மலைப்பகுதி இராஜ்யமாயிருந்தது. சோபாவின் அரசன் ஐப்பிராத்து நதியோரமாயிருந்த எல்லைப் பகுதியை மீண்டும் பிடிக்க யுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அவனது பின்புறமாக வந்து தாவீது அவனது படைகளைத் தாக்கினார்.

*தாவீது 21,700 பேரைக் கைதிகளாக்கிப்[13] பெருவெற்றியடைந்தார். அவர் பல குதிரைகளையும் இரதங்களையும் கூடக் கைப்பற்றினார்.[14]*

*சீரியாவின் தலைநகருக்கு இவ்வளவு அருகாமையில் தாவீது பெற்ற வெற்றியானது தமஸ்குவின் சீரியர்களைப்[15] பதட்டம் அடையச் செய்தது, அவர்கள் சோபாவின் அரசனுக்கு உதவி செய்ய ஓடினார்கள். அது மிகவும் விலை உயர்ந்த தவறாயிற்று. தாவீது இருபத்து இரண்டாயிரம் சீரியர்களைக் கொல்லுவித்தார், எஞ்சியிருந்த சீரியர்கள் இஸ்ரவேலர்களின் பண்ணை அடிமைகள் ஆயினர். தாவீது வடக்குப் பகுதியில் ஐப்பிராத்து நதி வரையிலும் தமது பேரரசை வெற்றிகரமாகப் பரப்பினார்.*

*2 சாமுவேல் 8:6ன் முடிவுப்பகுதி, தாவீது இந்த வெற்றியைப் பெற்றது எவ்வாறு என்பதை வலியுறுத்துகின்றது. தாவீது இராணுவ நடவடிக்கையில் ஒரு நிபுணராயிருந்தார், அவர் தம் (இராணுவத்) தலைவர்கள் தைரியமிக்க வர்களாயிருந்தார்கள், அவர்தம் மனிதர்கள் யுத்தம் செய்யும் எந்திரங்களாய் இருந்தார்கள்; ஆனால் அவரது குறிப்பிடத்தக்க வெற்றிக்கு இந்தக் காரணி கள் மட்டுமே பொறுப்புள்ளவைகளாய் இருந்ததில்லை. மாறாக, "தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்." இவ்வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; இவைகளே நமது பாடத்தின் அடுத்த பகுதிக்குப் பாடக் கருத்தாக உள்ளன.*

*பாராட்டுதலுக்கு உரியவர் யார் என்பதைத் தாவீது அறிந்திருந்தார். அவர், பொன்கேடகங்கள், ஏராளமான வெண்கலம் உட்படத் தமது வெற்றியில் கிடைத்த கொள்ளைப் பொருட்களை எருசலேமுக்குக் கொண்டு வந்து, அவற்றைக் "கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணினார்" (2 சாமு. 8:12). கைப்பற்றப்பட்டவற்றில் பெரும்பாலானவை தேவாலய நிதிக்கென்று ஒதுக்கப்பட்டன (1 நாளா. 18:8; 26:26 முதல்; 1 இரா. 7:5; 2 நாளா. 5:1 ஆகியவற்றைக் கவனிக்கவும்).*

*தாவீதின் பணப்பெட்டிக்குள் இவ்வுலகத்தின் செல்வம் பெருக்கெடுக் கத் தொடங்கிற்று. ஆமாத்தின் அரசர்[16] தம் பழைய விரோதியான சோபாவின் அரசனைத் தாவீது வெற்றிகொண்ட செய்தியைக் கேள்விப் பட்டபோது, அவர் தாவீதுக்கு வெள்ளி, பொன் மற்றும் வெண்கலம் என்ற பரிசுகளை அனுப்பி வைத்தார்.[17] தாவீது வெற்றிகொண்ட நாடுகளான சீரியா, மோவாப், அம்மோன், பெலிஸ்தியா, அமலேக்கு,[18] சோபா ஆகிய வற்றிலிருந்து விலையுயர்ந்த உலோகங்கள் வந்து குவியத் தொடங்கின (பிற்பாடு, தாவீது சாலொமோனிடத்தில், தாம் ஏற்கனவே 100,000 தாலந்து பொன்னையும் 1,000,000 தாலந்து வெள்ளியையும் சேர்த்து வைத்திருந்த தாகக் கூறினார்; 1 நாளாகமம் 22:14. இதை எழுதுகையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பற்றாக்குறையானது 300 இலட்சம் கோடி டாலர்களை அணுகியிருந்தது. தாவீது தேசீய நிதியில் ஏறக்குறைய 100 இலட்சம் கோடி டாலர்கள் உபரியாகக் கொண்டிருந்தார்!).*

*தெற்கிற்கு. மேற்கு, கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய திசைகளில் தாவீது தமது பேரரசை விரிவுபடுத்தி இருந்தார். இப்போது நாம் தெற்குதிசையில் இருந்த ஏதோம் நோக்கி கவனத்தைத் திருப்புவோம். 2 சாமுவேல் 8:13, "தாவீது உப்புப்பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறிய*

*அடித்துத் திரும்பினதினால் கீர்த்தி பெற்றான்" என்று கூறுகிறது.*[19] *உப்புப் பள்ளத்தாக்கு என்பது, உப்பு(சவ)க் கடலின் தெற்கில் இருந்தபடியாலும், 1 நாளாகமம் 18:12ல் உள்ள இணைக் குறிப்பானது "ஏதோமியர்கள்" என்று இவர்களைக் குறிப்பிடுவதாலும், இந்த வசனப்பகுதியானது அநேகமாக அரமீயர்கள் (சீரியர்கள்)*[20] *என்பதற்குப் பதில் ஏதோமியர்கள் என்றே இருந்திருக்க வேண்டும். ஏதோமியர்களைத் தோல்வியடையச் செய்த இந்த நிகழ்ச்சியானது தாவீதுக்கு அக்வாபா வளைகுடா மற்றும் தெற்கில் இருந்த வர்த்தகச் சாலைகளுக்கு வழியை ஏற்படுத்திற்று.*

*திறவுகோல் சொற்றொடர் மீண்டும் 2 சாமுவேல் 8:14ன் இறுதிப் பகுதியில் தோன்றுகின்றது: "தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்." சங்கீதம் 60 இந்தச் சத்தியத்திற்கான ஒரு விளக்கவுரையாக உள்ளது. இது உப்புப் பள்ளத்தாக்கில் நடந்த யுத்தத்தின் தொடக்க நிலைகளில் எழுதப்பட்டது (இந்த சங்கீதத்திற்கு முன்னதாக உள்ள தொடக்கக் குறிப்பைக் கவனிக்கவும்). இது எழுதப்பட்ட காலத்தில், ஏதோமியருடன் யுத்தம் நன்கு நடைபெறவில்லை. இது, "தேவனே, நீர் எங்களைக் கைவிட்டீர், எங்களைச் சிதறடித்தீர், எங்கள் மேல் கோபமாயிருந்தீர்; மறுபடியும் எங்களிடமாய்த் திரும்பியருளும்" என்று தொடங்குகின்றது (வ. 1). தாவீது, "அரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக் கொண்டுபோகிறவர் யார்? ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?" (வ. 9) என்று கேட்டார். அவர் தமது சொந்தக் கேள்விக்கு இந்த சங்கீதத்தின் இறுதிப்பகுதியில் பதிலளித்தார்: "தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்" (வ. 12). தாவீது தமக்கு வெற்றி கொடுத்தவரை ஒருக்காலும் மறக்கவில்லை.*

### *ஒருங்கமைக்கப்பட்ட ஒரு இராஜ்யம் (2 சாமுவேல் 8; 1 நாளாகமம் 23-27)*

*2 சாமுவேல் 8ம் அத்தியாயத்தின் கடைசிப்பகுதி, தாவீதின் ஆளுகையைத் தொகுத்துரைக்கின்றது: "இப்படியே தாவீது இஸ்ரவேல் அனைத்தின் மேலும் ராஜாவாயிருந்தான்; அவன் தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்துவந்தான்" (வ. 15). இராஜ்யத்தில் மற்றவர்கள் நியாயாதிபதிகளாகச் செயல்பட்டார்கள், ஆனால் ராஜா தாம் நீதிமன்றத்தில் கடைசி வேண்டுகோளைக் கவனிப்பவராக இருந்தார். தேவனுடைய பிரதிநிதி என்ற வகையில், ராஜா பாரபட்சம் இல்லாதவராகவும் நியாயமானவராகவும் இருக்க வேண்டியதாயிற்று.*[21]

*2 சாமுவேல் 8:16-18 வசனப்பகுதியானது, தாவீது அதிகாரத்தை எவ்வாறு பகிர்ந்து அளிப்பது என்பதை அறிந்திருந்த ஒரு திறமை வாய்ந்த நிர்வாகியாக இருந்தார் என்று கூறுகின்றது. யோவாப் படைகளின் மீது அதிகாரியாயிருந்தார். தாவீது, நடக்கும் விஷயங்கள் பற்றித் தமக்குப் பின்னடைவு இன்றி காத்துக்கொள்ளும் ''பதிவாளராகவும்'' தமது அறிவிப்பாளராகவும் அரசரின் ஆணைகளை மக்களுக்குத் தெரிவிப்பவராகவும் ஒருவரைக் கொண்டிருந்தார். சாதோக்கும் அகிமெலேக்கும் பிரதான ஆசாரியர்களாகப் பணியாற்றினார்கள். (இஸ்ரவேலில் சற்று காலத்திற்கு*

இரண்டு பிரதான ஆசாரியர்கள் இருந்தார்கள் என்பது உறுதி: தொடக்கத்தில் ஆசரிப்புக் கூடாரம் கிபியோனில் இருந்தபோது சாதோக்கும்,[22] பெட்டியானது எருசலேமுக்கு வந்தபோது அவருடன் அநேகமாக அகிமெலேக்கும்[23] இருந்தனர்.) தாவீதின் பராக்கிரமசாலிகளில் (2 சாமு. 23:20-23) ஒருவர் தாவீதின் மெய்க்காவலர்களுக்கு - இவர்கள் கிரேத்தா தீவில் இருந்தும் (இந்தக் கூலிப்படையினர் கிரேத்தியர்கள் எனப்பட்டார்கள்) பெலிஸ்தியாவில் இருந்தும் (இந்தக் கூலிப்படையினர் பிலேத்தியர்கள் எனப்பட்டார்கள்) தரவழைக்கப்பட்ட காவலர்களின் குழுவிற்கு[24] - தலைவராயிருந்தார். அலுவலகப் பதிவேடுகளை பதிவுசெய்யவும் பாதுகாக்கவும் ஒரு அரசுச் செயலாளர் பொறுப்பாளியாயிருந்தார். தாவீது தமது மகன்களையும் தமது அரசுப் பணிகளில் பயன்படுத்தினார். இவர்களைப் "பிரதானிகள்" என்று 2 சாமுவேல் 8:18 அழைக்க, "ராஜாவினிடத்தில் பிரதானிகள்" என்று 1 நாளாகமம் 18:17 அழைக்கின்றது.[25]

தாவீது எவ்வளவாகத் திகைப்புக்குரிய வகையில் (மிகச்சிறந்த) ஒருங்கமைப்பாளராக இருந்தார் என்று நீங்கள் அறிய விரும்பினால், 1 நாளாகமம் 23-27ஐ வாசித்துப் பாருங்கள். அந்தப் பதிவில் பெரும்பகுதி, மத ஆராதனைக்காக அவர் லேவியர்களை ஒருங்கமைத்தது பற்றிக் கூறுகின்றது (அதிகாரங்கள் 23-26), ஆனால் தாவீது யுத்தம் செய்வதற்கு ஒரு இராணுவமானது எப்பொழுதும் ஆயத்த நிலையில் இருக்கும் வண்ணமாக இராணுவத்தையும் ஒருங்கமைத்திருந்தார் (27:1-24). விவசாயம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தபடியால், அவர் நிலங்களுக்குப் பொறுப்பாளிகளையும் ஒருங்கமைத்திருந்தார் (27:25-31). தாவீதின் ஆலோசகர்கள் மற்றும் அவரது மகன்களுக்கான அரச உபாத்தியாயர் உட்பட அவர் தம் பிற பணியாளர்களின் பட்டியலுடன் இந்தப் பதிவேடு முடிவடைகின்றது (27:32-34). வெற்றிகரமான மனிதர்கள் விவரங்கள் குறித்து அக்கறையாக உள்ளனர்.

**காத்துக் கொள்ளப்பட்ட வாக்குறுதி (2 சாமுவேல் 9)**

2 சாமுவேல் 9ல் நாம், "தாவீதின் முழு வாழ்க்கையிலும் மிகவும் அழகிய மற்றும் இருதயத்தைத் தொடக்கூடிய நிகழ்ச்சிகளைக்"[26] கொண்டுள்ளோம் - இது தாவீது யோனத்தான் ஆகியோரின் நட்புறவு பற்றிய வரலாற்றிற்குப் பொருத்தமான உச்சக்காட்சியாக அமைந்துள்ளது.

தாவீது சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ராஜாவாகிப் பத்து ஆண்டுகள் கடந்திருந்தது. அவரது பேரரசு நிலைநாட்டப்பட்டு செழிப்படைந்து கொண்டிருந்தது; அவரது அரசாங்கம் ஒருங்கமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருந்தது. அவருக்கு (பழையவற்றை) மீண்டும் நினைத்துப் பார்க்க நேரம் இருந்தது. அவரது சிந்தனையானது வீரமிக்க ஒரு போர்ச்சேவகரும், இஸ்ரவேல் முழுவதிலும் பிரபுவாகவும் தமது (மிகச் சிறந்த) நண்பராகவும் விளங்கிய ஒருவர் மீது திரும்பிற்று. அவர் அறிந்தவற்றிலேயே இவர் [யோனத்தான்] வைத்த அன்புதான் முற்றிலும் சுயநலம் இல்லாததாக இருந்தது - மற்றும் அவர் இருபது ஆண்டுகளுக்கு முன்பாகத் தாம் இவருக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை நினைவுகூர்ந்தார். தாவீது தம்

*உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஓடிப் போவதற்குச் சற்றே முன்னதாக, அவரும் இந்த இளவரசரும் வயல்வெளியில் நின்றிருந்த வேளையில், யோனத்தான் தமது ஒரே ஒரு வேண்டுகோளை தாவீதிடம் விடுத்திருந்தார்: "மேலும் [நீர் ராஜாவாகும்போது], நான் உயிரோடிருக்கையில், நான் சாகாதபடிக்கு நீர் கர்த்தரின் நிமித்தமாய் எனக்குத் தயைசெய்ய வேண்டியதும் அல்லாமல், ... நீர் என்றைக்கும் உமது தயவை என் வீட்டைவிட்டு அகற்றிவிடாமலும் இருக்கவேண்டும்" (1 சாமு. 20:14, 15). தாவீது தாம் யோனத்தான்மீதும் அவன் குடும்பத்தின்மீதும் எப்பொழுதும் இரக்கம் காண்பிப்பதாக வாக்களித்திருந்தார் (1 சாமு. 20:17).*

*தாவீது இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய காலம் வந்திருந்தது. அவர், யோனத்தானுக்கு நேரடியாக உதவ இயலாமல் போய்விட்டது; அந்த இளவரசர் கில்போவா மலையில் பெலிஸ்தரின் அம்புகளின் மழையின் கீழ் வீழ்ந்து (இறந்து) விட்டார். ஆயினும் தாவீது யோனத்தானின் வீட்டாரில் இன்னமும் உயிரோடு இருக்கும் எவருக்காவது தமது வாக்குறுதியை நிறைவேற்ற முடியுமே.*

*அவர்களை [யோனத்தானின் வீட்டாரை] கண்டுபிடிப்பதுதான் பிரச்சனையாக இருந்தது. கிழக்கு நாட்டின் அரசர்கள் பொதுவாக அரியணைக்கு உரிமைகோரச் சாத்தியக்கூறுள்ள போட்டியாளர்களைக் கொல்லுவித்து விடுவதுண்டு என்பதால், இறந்துபோன அரசரின் உறவினர்கள் [குறிப்பாக அவரின் பிள்ளைகள்] மிகத் தாழ்வான வாழ்வை வாழத் தொடங்கி விடுவார்கள். தாவீது, "யோனத்தான் நிமித்தம் என்னால் தயவு பெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியா யிருக்கிறவன் உண்டா என்று கேட்டான்" (2 சாமு. 9:1). சவுலின் மகள்களில் ஒருத்தியை - மீகாளை - தாவீது தமது குடும்பத்தில் கொண்டிருந்தார், ஆனாலும் அவள் தன் குடும்ப உறுப்பினர்களில் எவராவது எங்கிருக் கின்றார்கள் என்பதை அறிந்திருந்தாலும் அவள் அதைப் பற்றித் தாவீதிடம் கூறியிருந்திருக்க மாட்டாள் (அவளால் தாவீதைச் சகித்துக் கொண்டிருக்க இயலாது). கடைசியாக, யாரோ ஒருவர் சவுலின் முன்னாளைய வேலைக் காரர்களில் ஒருவரான சீபா என்பவரைக் கண்டுபிடித்தார்கள். தாவீது அவரிடத்தில், "தேவன் நிமித்தம் நான் சவுலின் குடும்பத்தாருக்குத் தயை செய்யும்படி அவன் வீட்டாரில் யாதொருவன் இன்னும் மீதியாய் இருக்கிறானா? என்று கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: இன்னும் யோனத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு குமாரன் இருக்கிறான் என்றான்" (2 சாமு. 9:3).[27]*

*இந்த மகனின் பெயர் மேவிபோசேத் (அல்லது மேரிபால்[28]) என்பதாகும். இவர் ஐந்து வயதாயிருந்த போது இவரது தந்தையும் தாத்தாவும் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள் (2 சாமு. 4:4). சவுலும் யோனத்தானும் இறந்து போன செய்தியை மேவிபோசேத்தின் தாதி கேள்விப்பட்டபோது, அவள் பயத்தினால் தாக்கப்பட்டவளாக - பெலிஸ்தர்கள் தங்களைக் கொன்று விடுவார்களோ என்று பயம் கொண்டதினால், ஒருவேளை அவள் இஸ்ரவேலின் புதிய ராஜா தங்களைக் கொன்றுவிடக்கூடும் என்றும் பயந்திருக்கலாம் - அவள், சிறுவனாயிருந்த*

மேவிபோசேத்தை அள்ளியெடுத்துக்கொண்டு ஓடினாள், ஆனால் அவளது அவசரத்தினால் அவள் விழுந்தாள். மீண்டும் அவள் பிள்ளையை எடுத்துக்கொண்டு இரவோடிரவாக ஓடிப் போய்விட்டாள். சற்றுப்பிறகு அவள் அவனுடைய பிஞ்சுப் பாதங்கள் வீங்கி உருமாறி இருந்ததைக் கண்டாள். அந்தப் பையன் தன் வாழ்நாள் முழுவதும் முடவனாக இருந்தான்.

இளைஞனாயிருந்த மேவிபோசேத் மாகீர்[29] என்ற பெயருடைய ஒரு மனிதரின் வீட்டில் அடைக்கலம் புகுந்தார். இந்த மாகீர் என்பவர் யோர்தானுக்குக் கிழக்கில்[30] கீலேயாத்தின் எல்லைப் பகுதியின் உள்ளாக இருந்த லோதேபார் என்ற நகரத்தில் - தாவீதின் அரண்மனையில் இருந்து வெகுதூரத்தில் - வாழ்ந்து வந்தார். தனிமையான அந்தக் குக்கிராமத்தில், அவர் மறைவாக வளர்ந்து, திருமணம் செய்து, பிள்ளையொன்றுக்குத் தந்தையாகியிருந்தார்.[31] இவர் தம்மைப் பற்றி எல்லாரும் மறந்து விட்டார்கள் என்று நினைத்திருந்தார். இப்பொழுது இவர் தமது பெயர் அறியாத்தன்மையை இழந்துபோகக்கூடிய நிலையில் இருந்தார்.

> "அவன் எங்கே?" என்று ராஜா கேட்டதற்கு, சீபா ராஜாவைப் பார்த்து: "இதோ, அவன் லோதேபாரிலே அம்மியேலின்[32] குமாரனாகிய மாகீரின் வீட்டில் இருக்கிறான்" என்றான். அப்பொழுது தாவீது ராஜா அவனை லோதேபாரிலிருக்கிற அம்மியேலின் குமாரனாகிய மாகீரின் வீட்டிலிருந்து அழைப்பித்தான் (2 சாமு. 9:4, 5).

ஆயுதம் ஏந்திய காவலர்களால் சூழப்பட்டு, லோதேபாரில் இருந்து ஐம்பது அல்லது அதற்கும் அதிகமான மைல்கள் தாவீதின் வண்டியில் ஏற்றி வரப்பட்ட வேளையில், மேவிபோசேத்தின் இருதயத்தில் எழுந்திருக்கக் கூடிய பயத்தையும், பெரும் கவலையையும் கற்பனை செய்தல் என்பது கடினமாயிருப்பதில்லை. தாவீது "தயை காண்பிக்க" இருந்ததாகக் கூறியது உண்மைதான், ஆனால் அது அவர் தமது அரியணைக்குப் போட்டியாளர் களாயிருக்கக் கூடிய சாத்தியக்கூறு கொண்டவர்களைக் கண்டறிந்து, அவர்களை ஒழிப்பதற்கான சூழ்ச்சியாகக் கூட இருக்கலாமே (பிற்காலத்தில் ஏரோது அரசன் ஞானிகளிடத்தில் இயேசுவை "[நானும்] வந்து பணிந்து கொள்ளும்படி" [மத். 2:8] அவர் எங்கிருக்கின்றார் என்று அறிந்து வந்து தனக்குக் கூறும்படி கேட்டுக்கொண்டபோது, அவனாலும் [ஏரோது அரசனாலும்] இந்த சூழ்ச்சியே பயன்படுத்தப்பட்டது). ஒருவேளை மேவிபோசேத்து தமது தந்தைக்கும் தாவீதுக்கும் இருந்த நட்புறவு குறித்தும், தாவீது யோனத்தானிடம் கொடுத்திருந்த வாக்குறுதி குறித்தும் கேள்விப் பட்டு இருந்திருக்கலாம்; ஒருவேளை அவர் அதைக் கேள்விப்படாமலும் இருந்திருக்கலாம். எவ்வகையிலும், அவர் இருபது ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட ஒரு வாக்குறுதியை நம்பித் தமது வாழ்வை இடர்ப் பாட்டிற்கு உட்படுத்த விரும்பியிருக்க மாட்டார்.

அவர்கள் அரண்மனையை அடைந்தபோது, மேவிபோசேத் தாவீதின் முன்பாக நொண்டிக் கொண்டு வந்தார் (ஒருவேளை யாரேனும் அவரைத் தூக்கிக் கொண்டு வந்திருப்பார்கள்). தாவீது, பயத்துடன் இருந்த அந்த

*முடமான இளைஞனை உற்றுநோக்கி, தமது நண்பராயிருந்த பளிச்சிட்ட இளவரசரும் வீரருமாயிருந்தவரின் முகஜாடை எதுவும் இவரிடம் இருந்ததா என்று ஆராய்ந்தார். அவர் இவரை மேவிபோசேத்தே என்று அழைத்தார்.[33] இந்த இளைஞர் அரசரின் முன்பாக முகங்குப்புற விழுந்து,[34] "இதோ அடியேன்!" என்றார் (2 சாமு. 9:6).*

*தாவீது இந்த இளைஞரின் குரலில் இருந்த பயத்தைக் கேட்டார். ராஜா இவரைத் தூக்கி, பின்பு இவ்வாறு உறுதிப்படுத்தினார்: "நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயை செய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக் கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய்" (2 சாமு. 9:7).*

*தாவீது ராஜாவானபோது, சட்டப்படி சவுலுக்குரிய சொத்துக்கள் யாவும் அவருக்கு [தாவீதுக்கு] வந்து சேர்ந்தன. அவற்றை மீண்டும் சவுலின் சந்ததிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எதுவும் தாவீதுக்கு இருந்ததில்லை. அவ்வாறு செய்தல் என்பது கிருபையின் செயலாக, தாவீதின் இருதயத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருந்த, மேவிபோசேத்தின் தந்தையான யோனத்தானின் மீது, அவர் தாவீது கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாக இருந்தது. ஒரே இரவில் மேவிபோசேத் தர்மம் பெறும் நிலையிலிருந்து மிகுந்த செல்வந்தர் என்ற நிலைக்குக் கடந்து சென்று விட்டார். ஆயினும் தாவீதின் உணவு மேஜையில் வந்து உண்ணும்படி அழைக்கப்பட்டதுதான் மிகப்பெரிய கௌரவமாயிருந்தது. இந்த உரிமை ராஜாவின் மகன்களுக்கு மட்டும் உரியதாயிருந்தது. மேவிபோசேத் இராஜ அரண்மனைக்குத் திரும்பி வந்து ஒரு இளவரசனைப் போல் நடத்தப்பட வேண்டியவராயிருந்தார், அவர் தனிச்சிறப்பும் மரியாதையும் கொண்ட இடத்திற்கு மீண்டும் கொண்டு வரப்பட்டார்.*

*மேவிபோசேத் [மகிழ்வினால்] மூழ்கடிக்கப்பட்டார். அவர் மீண்டும் அரசரின் முன்பாக விழுந்து, "செத்த நாயைப்[35] போலிருக்கிற என்னை நீர் நோக்கிப்பார்க்கிறதற்கு, உமது அடியான் எம்மாத்திரம்" என்று ஆச்சரியப்பட்டார் (2 சாமு. 9:8). அதை மேவிபோசேத்துக்கு மீண்டும் உறுதிப்படுத்தவும் தமது அளிப்பு உண்மையானது என்பதை நிரூபிக்கவும் தாவீது சீபாவை அழைத்து, மேவிபோசேத்தின் புதிய சொத்துக்களுக்கு அவரை [சீபாவை] உக்கிராணக்காரராக்கினார்.[36]*

*விரைவிலேயே மேவிபோசேத்தும் அவரது குடும்பமும் தலைநகருக்கு வந்து குடியிருந்தார்கள். "மேவிபோசேத் ராஜாவின் பந்தியில் நித்தம் அசனம் பண்ணுகிறவனாயிருந்தபடியினால், எருசலேமிலே குடியிருந்தான்" (2 சாமு. 9:13). தாவீது மேவிபோசேத்தின் வாழ்வை ஆசீர்வதித்த செயலானது ஒரு கிருபையுள்ள தன்மையாகவே உள்ளது. இது தாவீதை இன்னும் அதிகமாய் ஆசீர்வதித்தது என்பதில் சந்தேகம் இல்லை. இரவு உணவு வேளையில் ராஜா மேஜையில் மேவிபோசேத்தைக் கண்ணோக்கி, தம் முகத்தில் ஒரு புன்முறுவலுடன், தாமும் யோனத்தானும் வயல் வெளிகளில் ஒன்றாய்ச் சுற்றிய மகிழ்ச்சி நிறைந்த நாட்களைப் பின்னோக்கி நினைத்திருந்ததை நான் காண முடிகின்றது.[37] நாம் யாருக்குத் தயவைக் காண்பிக்கிறோமோ அவரைக் காட்டிலும் நம்மை அந்தத் தயவு அதிகமாய்*

*ஆசீர்வதிக்கின்றது.*

### *ஜெயம் கொண்ட ஒரு வெற்றி (2 சாமுவேல் 10-12; 1 நாளாகமம் 19; 20)*

*"தாவீதின் நல்ல நாட்கள்" பற்றிய 2 சாமுவேல் 1-10 வசனப்பகுதியானது முந்திய அத்தியாயம் பற்றிய ஒரு அடிக்குறிப்புடன் முடிவடைகின்றது. அத்தியாயம் 8ல் "அம்மோன் புத்திரர்" தாவீதுக்குக் கப்பங்கட்டினார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது (வ. 11), ஆனால் அந்த அத்தியாயத்தில் அம்மோனியர்களைத் தோற்கடித்ததற்கான பதிவேடு எதுவும் நமக்கில்லை. அத்தியாயங்கள் 10 முதல் 12 வரையுள்ள பகுதியில் நமக்கு அம்மோனியர் களுடனான யுத்தம் பற்றிய விவரங்கள் தரப்படுகின்றன. மேலும், நாம், அத்தியாயம் 8ல், "சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டினார் கள்" (வ. 6) என்று வாசிக்கின்றோம். அத்தியாயம் 8, சீரியர்களுடனான யுத்தங்களில் சிலவற்றைப் பற்றிக் கூறுகின்றது, ஆனால் அத்தியாயம் 10 "எஞ்சிய வரலாற்றை" - சீரியர்கள் கடைசியாக எவ்வாறு எப்பொழுது கீழ்ப்படுத்தப்பட்டார்கள் என்ற விவரங்களை - தருகின்றது.*

*இரக்கத்தின் பாடக் கருத்து என்பதே அத்தியாயங்கள் 9 மற்றும் 10 ஆகியவற்றிற்கு இடையில் உள்ள பிணைப்பாக உள்ளது. இவ்விரண்டு அத்தியாயங்களிலும் தாவீது, தந்தையர்களினிமித்தமாக அவர்களின் தனயர்களுக்குத் தயவு காண்பிக்க முயற்சி செய்தார். அத்தியாயம் 9ல் இந்தத் தயவின் கொடையானது நன்றியுணர்வுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க, அத்தியாயம் 10ல் இது வன்மையாக மறுக்கப்பட்டது.*

*அத்தியாயம் 10 பின்வருமாறு தொடங்குகின்றது:*

> *அதன்பின்பு[38] அம்மோன் புத்திரரின் ராஜா மரித்துப்போனான்; அவன் குமாரனாகிய ஆனூன் அவன் பட்டத்திற்கு ராஜாவானான். அப்பொழுது தாவீது, ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயை செய்ததுபோல, அவன் குமாரனாகிய இவனுக்கு நான் தயை செய்வேன் என்று சொல்லி (வ. 1, 2).*

*அம்மோன் புத்திரரின் அரசன் தாவீதிடத்தில் என்ன வகையான தயவைக் காண்பித்தான் என்று நாம் அறிவதில்லை. ஒருவேளை அவன், தாவீது தேடப்பட்டவராயிருந்த நாட்களின்போது அவர் மீது தயவாயிருந்திருக்க லாம்.[39] எவ்வகையிலும், தாவீது தயவுக்குப் பதில் தயவு செய்ய விரும்பினார்.*

*தாவீது, ஆனூனுக்குத் தம் பரிவிரக்கத்தை வெளிப்படுத்துவதற்காகத் தமது ஊழியக்காரர்களை அம்மோன் நாட்டின் தலைநகரான ரப்பாவுக்கு[40] அனுப்பினார். இருப்பினும் அந்த ஊழியக்காரர்கள் ரப்பாவை அடைந்த போது, அம்மோன் புத்திரரில் பிரபுக்கள் தங்கள் அரசனை, தாவீதின் மனிதர் கள் இரக்கத்தினிமித்தம் வரவில்லையென்றும், அவர்கள் உளவாளிகளா கவே வந்துள்ளார்கள் என்றும் நம்ப வைத்தார்கள். அம்மோன் புத்திரரின் அரசனுடைய பதில்செயலானது இருமடங்கு அவமானப் படுத்துதலா யிருந்தது. "அப்பொழுது ஆனூன்: தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியைச் சிரைத்து, அவர்களுடைய*

*வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப்பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பி விட்டான்" (2 சாமு. 10:4). சில மனிதர்கள் முகம் மழித்தவர்களாகச் சென்றாலும், பொதுவாக தாடி என்பது ஒருவரின் ஆண்மைத்துவத்தின் அடையாளமாக இருந்தது. ஒவ்வொரு தாடியின் ஒரு பாதியை மட்டும் மழித்தெடுத்ததின் மூலம் அவர்கள் மனிதர்கள் என்று எண்ணப்படுவதைக் காட்டிலும் குறைவானவர் களாயிருந்தார்கள் என்ற செய்தியை அந்த அரசன் அனுப்பினான். அவர்களுடைய உடைகளை இடுப்பு வரைக்கும் கத்தரித்து, அவர்களை அரை நிர்வாணிகளாய் அனுப்பினது என்பது இரண்டாவது அவமானமா யிருந்தது. அது யுத்தக் கைதிகளை நடத்தும் விதமாயிருந்தது (ஏசா. 20:4ஐக் காணவும்).*

*தாவீதின் ஊழியக்காரர்கள் சங்கடமும் சிறுமையும் அடைந்தவர் களாய்த் திரும்பி வந்தார்கள். தாவீது கடுங்கோபம் அடைந்தார், ஆனால் அம்மோனியர்கள் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள் என்று அறியும் வரைக்கும் அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந் தார் - இவர்கள் (அம்மோனியர்கள்) அவர்களுடன் (இஸ்ரவேலர்களுடன்) யுத்தம் செய்வதற்கு முப்பத்து மூன்றாயிரம் பேர்களைக் கூலிக்கு அமர்த்தினார்கள்[41] (இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு சீரியர்களாயிருந் தார்கள்[42]) உடனே தாவீது யோவாபையும் தமது மிகச் சிறந்த போர்வீரர் களையும் யுத்தகளத்திற்கு அனுப்பினார்.*

*யோவாப் ரப்பாவை அடைந்தபோது, அவர் இரண்டு முன்னணிகளில் போரிட வேண்டியிருக்கும் என்று அறிந்தார்: அம்மோனியர்கள் தலை நகரைத் தற்காத்துக் கொண்டிருந்தார்கள்; மற்ற துருப்புகள் வயல்பகுதியில் இருந்து தாக்கத் தயாராயிருந்தார்கள். தோல்வி ஏற்படும் போல் தோன்றிற்று. இது யோவாபின் நேர்த்தியான தருணமாயிருந்தது. யோவாப் தமது மிகச் சிறந்த மனிதர்களைத் தேர்வு செய்து கூலிப்படைகளுடன் போரிடச் செய்தார். எஞ்சியவர்களை அவர் தமது சகோதரனான அபிசாயின் கீழ் இருந்து அம்மோனியர்களுடன் போரிடச் செய்தார். பின்பு அவர் தம் மனிதர்களை ஒன்றுகூட்டி, அவர்களுக்குப் பின்வருமாறு கட்டளை கொடுத்தார்:*

> *சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால், நீ எனக்கு உதவி செய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவி செய்ய வருவேன். தைரியமாயிரு, நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம். கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக (2 சாமு. 10:11, 12).*

*இது இதயத்தை உலுக்கும் உரையாயிருந்தது, இது யோவாபின் பாணியிலில்லாத உரையாயிருந்தது, எல்லா நடத்துனர்களும் இதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். ஒற்றுமைக்கான அவசியம், தைரியத்திற்கான அவசியம், தேவனுடைய சித்தத்திற்கு இணங்கிப் போவதற்கான அவசியம் ஆகியவை வல்லமை நிறைந்த ஊக்குவித்தல்*

களாயிருக்கின்றன. யோவேப் தமது உரையின் முடிவில் ஒரு கணம் தலைகுனிந்திருப்பதை நான் காண்கின்றேன். பின்பு மலைகளெங்கும் அவருடைய மனிதர்களின் ஆரவாரங்கள் எதிரொலிப்பதை நான் கேட்கின்றேன். கடைசியில், அவர்கள் - இஸ்ரவேலின் மகிமைக்காக, தேவனுடைய மகிமைக்காக - மாபெரும் வெற்றி வாய்ப்பை நாட யுத்தம் செய்யக் கூக்குரலிட்ட வேளையில் அவர்களின் கண்களில் தெறித்த உக்கிரத்தை நான் காண்கின்றேன்.

அந்த நாளில் கர்த்தர் யோவாபுக்கு மாபெரும் வெற்றியைக் கொடுத்தார். சீரியர்கள் சிதறியோடினர்; அம்மோனியர்கள் ரப்பாவிற்குள் பதுங்கினர். கர்த்தர் தம்மீது நம்பிக்கை கொண்டவர்களுடன் இருந்தார்.

தோற்கடிக்கப்பட்ட சீரியர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குப் பதுங்கிப் பின்சென்றபோது, சீரியாவின் தலைவர்கள்[43] உக்கிரகோபம் கொண்டார்கள். சீரியர்கள் தங்கள் படைகளை இஸ்ரவேலுக்கு எதிராக ஒரு மாபெரும் தாக்குதலுக்கு ஒன்றுகூட்டினார்கள், அவர்கள் ஐப்பிராத்து நதிக்கு அப்புறத்திலிருந்தும் கூடப் போர்வீரர்களைப் பணிக்கு அமர்த்தினார்கள்.

பெருந்திரளான படை நெருங்கிக் கொண்டிருப்பதைத் தாவீது அறிந்தபோது, (தமது) படையை இன்னொருவரை நம்பி ஒப்புவித்தால் அதன் விளைவு மிகுந்த இடர்ப்பாடு உடையதாயிருக்கும் என்று அறிந்தார். தாவீது, சீரியப் படைகளை இடைமறிப்பதற்கு, தாமே, "இஸ்ரவேலை யெல்லாம் கூட்டிக் கொண்டு, யோர்தானைக் கடந்து" சென்றார் (2 சாமு. 10:17). மீண்டும் ஒருமுறை தேவன் இஸ்ரவேலருக்கு மாபெரும் வெற்றியை அருளினார். சீரியர்களின் பிரதான படைத் தளபதி உட்பட அவர்களில் நாற்பத்தி ஏழாயிரம் பேர் விழுந்தார்கள். சீரியர்கள், "இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு இஸ்ரவேலரோடே சமாதானம் பண்ணி அவர்களைச் சேவித்தார்கள்" (2 சாமு. 10:19).[44]

இது அம்மோனியர்களின் படை, தடை ஏற்படுத்தியிருந்த ரப்பாவில் இன்னமும் முடிந்திராத பணியை விட்டு வைத்தது. அடுத்த வசந்த காலத்தில், பயணம் செய்வதென்பது சாத்தியமானவுடனே, தாவீது ரப்பாவைக் கைப்பற்றும்படி யோவாபை அனுப்பினார், அவர் எருசலேமிலேயே தங்கிவிட்டார் (2 சாமு. 11:1). (இந்த வேளையில்தான் தாவீது பத்சேபாளுடன் பாவத்திற்கு உட்பட்டார். வரலாற்றின் இப்பகுதியை நாம் இப்போதைக்குத் தாண்டிச் செல்லுவோம். அம்மோனியர்களுடனான யுத்தத்தில் வரலாற்றை உடனடியாக நிறைவு செய்த நாளாகமங்களின் எழுத்தாளருடைய உதாரணத்தை நாம் பின்பற்றுவோம் [1 நாளா. 20:1-3].)

யோவாப் முதலில் ரப்பாவை நேரடியாகத் தாக்க முயற்சி செய்தார், ஆனால் அதின் சுவர்களைத் தாண்டிச் செல்வது என்பது இயலாத விஷயமாக இருந்தது (2 சாமு. 11:1, 17-24). பின்பு அவர் அந்த நகரத்தைச் சுற்றிலும் இருந்த தண்ணீர் ஆதாரமூலங்களின் பாதுகாப்புகளைத் தாக்கி அவற்றைக் கைப்பற்றினார்.[45] அவர்களின் தண்ணீர்க் குழாய்களை யோவாப் துண்டித்துப் போட்டிருந்தபடியால், அதன் குடிமக்கள் விரைவிலேயே சரணடைவார்கள் என்பதை யோவாப் அறிந்திருந்தார். அவர் தாவீதுக்குப்

*பின்வருமாறு செய்தியனுப்பினார்: "நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காதபடிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக்கொண்டு வந்து, பட்டணத்தை முற்றிக்கைபோட்டு, பிடிக்கவேண்டும்" (2 சாமு. 12:28).[46]*

*தாவீது ரப்பாவுக்கு வந்த கடைசித் தாக்குதலை முன்னின்று வழிநடத்தினார். அந்த நகரம் விழுந்த போது, அம்மோனியர்களின் ராஜாவினுடைய கிரீடத்தை, தாவீதுதான் அவர்களின் புதிய அரசர் என்று சுட்டிக் காண்பிப்பதற்காக அவருடைய தலையின்மீது வைத்தார்கள்.[47] பின்பு தாவீது ...*

> *... அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும் இருப்புக் கோடாரிகளுக்கும் உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப் பண்ணினான்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது எல்லா ஜனத்தோடுங் கூட எருசலேமுக்குத் திரும்பினான் (12:31).[48]*

*பதிவேட்டில் உள்ளபடி, தாவீதின் வாழ்நாட்களின்போது சுற்றிலும் இருந்த நாடுகளினால் ஏற்பட்ட பிரதான எழுச்சிகளில் இதுவே கடைசியானதாக இருந்தது.*

*நீண்ட காலத்திற்கு முன்பு ஆபிரகாமிடம் தேவன், "... எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து என்னும் பெரிய நதி மட்டுமுள்ளதும், ... இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்'' (ஆதி. 15:18-21) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். அந்த வாக்குத்தத்தத்தைத் தேவன் தாவீதின் மூலமாக நிறைவேற்றினார். தாவீதின் பேரரசானது தெற்கில் எகிப்தின் நதி[49] முதல் வடக்கில் ஐபிராத்து நதி வரைக்கும், மேற்கில் (மத்திய தரைக்) கடல் முதல் கிழக்கில் யோர்தானுக்கு அப்புறமான பகுதி வரைக்கும் (1 இரா. 4:21-24) பரந்து விரிந்திருந்தது. தாவீது ஆறாயிரம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட நாட்டை ஆட்சி செய்தார். உலகத்தின் (அப்போதைய) சொத்துக்களில் 90 சதவிகிதம் அவரது செங்கோலின் கீழ் இருந்தது.*

*தேவன், பெத்லகேமில் இருந்த ஆடுகளை மேய்க்கும் பையனை அவனது எண்ணிப் பார்க்க முடியாத கனவுகளுக்கு அப்பாலும் வெற்றிகரமாக உயர்த்தியிருந்தார்.*

## *மிகவும் முக்கியமானதாக உள்ளதை இழந்து விடாமலேயே வெற்றியை ஆதாயப்படுத்திக்கொள்ளுவது எப்படி*

*தாவீது உச்சிக்கு எழும்பிய வரலாற்றில் உள்ள பாடங்கள் யாவை? குறிப்பாக நாம், - நமது ஆத்துமா உட்பட - உண்மையில் மிகவும் முக்கியமானவைகளாக உள்ளவற்றை இழந்து போகாமலேயே வெற்றிகர மானவர்களாக இருப்பது எப்படி? தாவீதின் வெற்றியை நான் ஆராய்கை யில், நான் ஐந்து ஆலோசனைகளை வடிவமைத்தேன்.*

*(1) உங்கள் நோக்கத்தை மறவாதீர்கள்.*

*வெற்றி என்பது பெரும்பாலும் கெட்ட பெயர் கொண்ட தன்மையையும் புகழ்ச்சியையும் அடிக்கடி கொண்டு வருகின்றது, முடிவில் இது தடம் மாறுதலைக் கொண்டு வர, இந்தத் தடமாற்றமானது கடைசியில் தோல்வியைக் கொண்டு வருகின்றது. இதற்கு ஏராளமான உதாரணங்களைத் தர முடியும்: வெற்றியின் அழுத்தத்தைத் தாங்க இயலாத தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நட்சத்திரங்களில் சிலர் மதுபானம், போதைப் பொருட்கள் போன்றவற்றிற்குத் திரும்புவதன் மூலம் தங்கள் தொழில் முன்னேற்றத்தை அழித்துக் கொள்கின்றார்கள்; தேசீய சாதனையாளராக வெற்றியடைகின்ற ஒரு விளையாட்டுக் குழுவினர், தடம் மாறுதலின் விளைவாக அடுத்து வரும் ஆண்டில் பயங்கரமான தோல்வியைத் தழுவுகின்றார்கள்; அதிகாரத்தினால் கேடுபாடுக்கு உள்ளான அரசியல்வாதி அடுத்து வரும் தேர்தலில் தோல்வியடைகின்றார்.*

*தாவீது தமது நோக்கத்திலிருந்து தடம் மாறியதை - அதனால் விளைந்த பேரழிவை - நாம் அடுத்து வரும் பாடங்களில் காண்போம், ஆனால் நமது படிப்பின் இந்தப் பகுதி வரையிலும், தாவீது, தேவன் தமக்குக் கொடுத்திருந்த அறைகூவல்களின் மீது ஒருமித்த கவனம் செலுத்தி வந்ததைக் கண்டுள்ளோம்: அரியணையில் அவர் (தாவீது) தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும், பேரரசை நிலைநாட்ட வேண்டும், மேசியா வரவிருந்த மக்களினத்தை அவர் (தாவீது) பாதுகாக்க வேண்டும். தாவீது கவனம் செலுத்துவதில் நிலைத்திருந்ததால், அந்த அறைகூவல்களை அவர் சிறப்புயர்வாக நிறைவேற்றினார்.*

*இலக்கு அமைத்தல் என்பது பற்றி நாம் அதிகம் கேள்விப்படுகின்றோம். இலக்குகள் தகுதி வாய்ந்தவைகளாயிருக்கும் வரையிலும் இலக்கு அமைத்தல் என்பது [ம்] தகுதி வாய்ந்ததாக உள்ளது. நாம் நமது முன்னுரிமைகளை நேராகக் காத்துக்கொள்ள வேண்டும்: முதலிடம் தேவனுக்கு, இரண்டாமிடம் பிறருக்கு (குடும்பத்தினர் இந்தப் பட்டியலில் மேலிடத்தைப் பெற்றிருக்க வேண்டும்), மற்றும் கடைசி இடம் நமக்கு என்றிருக்க வேண்டும் (மத். 22:37, 38; 6:33). ஆயினும் நமது இலக்குகளை அமைத்த பின்பும் கூட தடம் மாறிச் சென்று விடுவது சுலபமானதாகவே உள்ளது. வாழ்க்கை என்பது எதைப்பற்றியது என்பதை நாம் மறந்து விடுகின்றோம். உண்மையில் மிகவும் முக்கியமாக உள்ளதை நாம் மறந்து விடாமல் இருக்கும்படி செயல்பட வேண்டும்.*

*பவுலின் புகழ்பெற்ற கூற்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: "... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி. 3:13, 14). "ஒன்று செய்கிறேன்" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். "நான் ஒரு டஜன் விஷயங்களை முயற்சி செய்கிறேன்'' என்றோ அல்லது ''ஒரு நூறு விஷயங்களில் மேலோட்டமான அக்கறை செலுத்துகிறேன்" என்றோ அவர் கூறவில்லை, ஆனால் ''ஒன்று செய்கிறேன்'' என்றார். பவுல் கவனம் செலுத்திய - கிறிஸ்துவின் மீது கவனம் செலுத்திய - தனிநபராயிருந்தார்.*

*உங்கள் வாழ்வில் நீங்கள் என்ன செய்யும்படி தேவன் விரும்புகின்றார் என்பதை முடிவு செய்ய, சிந்தனையிலும் ஜெபத்திலும் நேரத்தைச் செலவிடுங்கள். அந்த குறிக்கோள்களையும் நோக்கங்களையும் மறவாதீர்கள். அவற்றில் கவனம் செலுத்துவதில் நிலைத்திருங்கள்.*

***(2) உங்கள் கடனை மறவாதீர்கள்.***

*நீங்கள் ஓரளவுக்கு வெற்றியடைந்திருந்தால், அதை உங்களுக்குச் சாத்தியமாக்கியவர்களுக்கு நீங்கள் பட்டுள்ள கடன்களை மறவாதிருங்கள். வெற்றிகரமான மக்கள் பெரும்பாலும், தாங்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றடையத் தங்களுக்கு உதவிய "சிறு மக்களை" நினைவில் வைக்க முடியாத அளவுக்கு "மிகப் பெரியவர்களாய்" ஆகிவிடுகின்றார்கள்.*

*தாவீது தமது வெற்றிக்குப் பங்களித்த மற்றவர்களை அங்கீகரித்தார். நான் மீண்டும் உங்களுக்கு 2 சாமுவேல் 23ல் உள்ள தாவீதின் "மதிப்பிற்குரியவர்களின் பெயர் அட்டவணையை" நினைவுபடுத்துகிறேன். அதில் அவரது "பராக்கிரமசாலிகளின்" பெயர்களும் அவர்களின் நினைவு கூரத்தக்க செயல்களும் பட்டியலிடப்பட்டுள்ளது. ஆயினும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தாவீது தமது வெற்றிகளுக்குரிய பெருமையைக் கர்த்தருக்கே கொடுத்தார். சங்கீதம் 60ல் அவர், "தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப் போடுவார்" என்று கூறினார் (வ. 12). தாவீது தமது வெற்றிகளின் வருமானத்தைக் கர்த்தருக்கு அர்ப்பணித்ததின்மூலம் தாம் கர்த்தரை மதித்ததைக் காண்பித்தார்.*

*பவுல், தமது வாழ்வில் பங்களித்த தேவனுக்கும் மக்களுக்கும், மதிப்புச் செலுத்திய இன்னொரு தனிநபராக இருந்தார். எடுத்துக்காட்டாக, ரோமர் 16ல் அவர் பெபேயாளைப் பற்றிப் பேசினார், அவர் "அவள் ... எனக்குங்கூட ஆதரவாயிருந்தாள்" (வ. 2) என்று கூறினார். இந்த நிருபத்தின் முன்பகுதியில் பவுல், தேவனுடைய ஆவியானவர் "நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்" (ரோமர் 8:26) என்று கூறினார். தேவபக்தியுள்ள ஒரு சகோதரி பவுலுக்கு உதவியிருந்தாள், தேவன் பவுலுக்கு உதவியிருந்தார், உதவியின் இந்த இரு ஆதாரங்களைப் பற்றியும் நாம் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்.*

*எப்பொழுதாவது எந்த ஒரு வெற்றியையாவது நாம் பெறும்போது, அது எவ்வளவு சிறியதாக இருப்பினும், அந்த வெற்றிக்குப் பிறர் பங்களிக்கின்றார்கள். நமக்கு வெகுமதியளிக்கும் நிகழ்வொன்றில் மேடையில் நின்று "நான் என் பெற்றோருக்கும் என் ஆசிரியர்கள் முதலானோருக்கும் நன்றி செலுத்த விழைக்கின்றேன்" என்று கூற வாய்ப்பை ஒருக்காலும் பெற முடியாமல் போகலாம், ஆனால் அவர்கள் நமக்குச் செய்ததை நாம் எவ்வளவாக பாராட்டுகின்றோம் என்பதை நேருக்கு நேர் ஒரு சில வார்த்தைகளின் மூலமாகவோ, ஒரு தொலைபேசி அழைப்பின் மூலமாகவோ அல்லது அளவற்ற உற்சாகத்தை அளிக்கக் கூடிய ஒரு சிறு குறிப்பின் வழியாகவோ நாம் அவர்களுக்கு அறிவிக்க முடியும்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, நமது வெற்றியைச் சாத்தியமாக்குகிறவர் தேவனே என்பதை நாம் உணர வேண்டும். ஒரு பெரிய ஓட்டப்பந்தயத்தில்*

*யாரேனும் ஒருவர் வெற்றியடையும் போது, அவரால் அது எப்படிச் சாத்தியமாயிற்று என்று தவறாமல் கேட்கப்படுகின்றது. அப்போது அந்த வெற்றியாளர், தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்ட பெருநோக்கம் கொண்ட இலக்குகளைப் பற்றியும், தாம் கடந்து வந்த துன்பமிக்க பயிற்சி பற்றியும் - இவைகள்தான் தீர்மானிக்கும் காரணிகள் என்பது போல - விவரித்துக் கூறிக்கொண்டிருப்பார். தன்னடக்கம் என்பது ஒரு காரணி யாகும் என்பது நிச்சயமே, ஆனாலும் நூற்றுக்கணக்கான மற்றவர்களும் திடமனதாயிருந்தும் கடினமான பயிற்சித் திட்டங்களில் அவரைப் போலவே கடந்து சென்றும் இவர்கள் வெற்றி பெறவில்லை. அவர் ஏன் வெற்றி பெற்றார்? முதல் முக்கியமாக தேவன் அவருக்குத் தனிச்சிறந்த தாலந்துகளையும் திறமைகளையும் கொடுத்த காரணத்தினால்தான் அவர் வெற்றி பெற்றார். அவற்றை அவர் மேம்படுத்திக்கொள்ள வேண்டி யிருந்தது, ஆனால் தேவன் நம்மில் பலருக்குக் கொடுத்திராத திறமையை அவருக்கு கொடுத்தார்.*

*நாம் - ஒரு தேர்வில் வெற்றிபெறுதல், ஒரு அணியை ஏற்படுத்துதல், உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் பட்டம் பெறுதல், ஒரு வேலையைப் பெறுதல், ஒரு துணையைக் கண்டறிதல், ஒரு வீட்டை வாங்குதல், ஒரு பிள்ளையைப் பெறுதல், ஒரு பதவி உயர்வைப் பெறுதல், சுகவீனத்திலிருந்து மீளுதல் அல்லது ஒலிம்பிக் விளையாட்டில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிபெறுதல் என்பது போன்ற - எந்த வகையான வெற்றியைப் பெற்றாலும், அதைக் கர்த்தரே நமக்கு வாய்க்கச் செய்தார் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி” (யாக். 1:17). நாம் ஒருவேளை, ஒரு நாட்டின் பார்வையாளர்களுக்கு - உதாரணமாக, ஒரு கால்பந்து விளையாட்டு வீரர் கோல் ஒன்றைப் போட்ட பின்பு, ஒரு வினாடி நேரம் தலைகுனிந்து இருப்பது போல - நன்றியைத் தெரிவிக்க வாய்ப்புப் பெறாமல் போகலாம், ஆனால் நாம் தேவனுக்கு நன்றிசெலுத்த நமது குரல்களை உயர்த்தி, கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளை மற்றவர்களுக்குக் கூறலாம். மேலும் நாம் தாவீதைப் போல், நம்மிடம் உள்ள யாவற்றையும் நம்மையே முழுவதும், நமக்கு யாவற்றையும் தருகின்ற கர்த்தருக்கு அர்ப்பணம் செய்து வாழ முடியுமே.*

***(3) உங்கள் பொறுப்புகளை மறவாதீர்கள்.***

*உச்சத்தை அடையும்போது பலர், தாங்கள் கொடுத்த வாக்குறுதி களையும் ஏற்படுத்திய பொறுப்புகளையும் வசதியாக மறந்து விடுகின்றார் கள். ஒரு மனிதர், தாம் சிரமப்பட்ட காலத்தில் திருமணம் செய்து கொண்டிருந்த தம் மனைவி இப்பொழுது தமக்குச் சங்கடமூட்டுபவளா யிருப்பதாகக் கண்டு, அவளைத் தூக்கியெறிந்து விட நினைக்கலாம். ஒருவர், முன்பு தமது வர்த்தகக் கூட்டாளியாய் இருந்தவருடன் தாம் செய்து கொண்ட ஒப்பந்தமானது நிறைவேற்ற மிகவும் விலைசெலுத்த வேண்டி யுள்ளது என்று நிரூபிக்கப்பட்டு - அதைப் புறக்கணித்து விடலாம், அந்தப் புறக்கணிப்பை நியாயப்படுத்த “நாம் ஏதொன்றிலும் எந்தக் காலத்திலும்*

கையெழுத்திடவில்லையே" என்று கூறிக்கொள்ளலாம்.

இவ்வாறு செய்யக் கூடிய நிலையொன்றைத் தாவீது இறுதியில் அடைந்த வேளையில், அவர் இருபது அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு களுக்கு முன்பு தாம் கொடுத்த வாக்குறுதியொன்றை நிறைவேற்றினார். அவர் சவுலினால் எவ்வாறு நடத்தப்பட்டிருந்தார் என்பதைக் கருத்தில் கொண்டால், தாவீது தம் வாக்குறுதியை வசதியாக மறந்து போயிருந்தால் கூட யாரும் அவரைக் குற்றப்படுத்தியிருக்க மாட்டார்கள். இருந்த போதிலும், தாவீது அதை கர்த்தருக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரு பரிசுத்தமான வாக்குறுதியாகக் கண்ணோக்கினார்.[50] அது மீறப்படக் கூடாது என்றும் அவர் நினைத்தார். இவ்விதமாக, அவர் யோனத்தானின் மகனைத் தேடி அவரைக் கனப்படுத்தினார்.

நாம் யாவரும் பொறுப்புகளை ஏற்படுத்துகின்றோம். நம்மில் ஏராளமானவர்கள், நாம் நம் விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது நம் வாழ்வைக் கர்த்தருக்கு அர்ப்பணித்த கிறிஸ்தவர்களாயிருக்கின்றோம். நம்மில் ஏராளமானவர்கள், ஒரு மனைவியை அல்லது ஒரு கணவரை வாழ்நாள் முழுவதும், "அன்புகூர்ந்து, மதித்து, வளமூட்ட" பொறுப்புகளை ஏற்படுத்தியவர்களாயிருக்கின்றோம் (மத். 19:3-9ஐக் காணவும்). அநேகமாக நாம் வேறு சில பொறுப்புகளையும் ஏற்படுத்தியவர்களாயிருக்கலாம். எண்ணாகமம் 30:2ஐ ஆழ்ந்து சிந்தியுங்கள்: "ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினா லும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக்கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக் கடவன்." நாம் நம் பொறுப்புகளைக் காத்துக் கொள்ளாமல் நமது நேர்மையைப் பராமரிக்க இயலாது.

**(4) வெற்றியானது விரைவாய்க் கடந்து விடும் என்பது மறவாதீர்கள்.**

ஒரு நாள் நீங்கள் "கவனத்திற்குரியவராக" இருந்து, பின்பு அடுத்த நாளே "ஒன்றுமில்லாதவராக" ஆகிவிடக் கூடும். ஒரு நாள் உங்களிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இருந்து, பின்பு அடுத்த நாளே உங்களிடம் ஒரு பைசா கூட இல்லாத நிலை ஏற்படக் கூடும். நீங்கள் ஒரு நாள் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைவராயிருந்து பின்பு அடுத்த நாளே அதன் வாயிற்காவலராகி விடக்கூடும். நீங்கள் ஒரு நாள் உடல்நலத்துடன் இருந்து பின்பு அடுத்த நாளே தீவிர சிகிட்சை வார்டில் அனுமதிக்கப்படக் கூடும். ஒருநாள் நீங்கள் பெருமையுள்ள பெற்றோராயிருந்து பின்பு அடுத்தநாளே இருதயம் உடைந்துபோன ஒரு தாயாகவோ அல்லது தந்தையாகவோ ஆகி விடக்கூடும்.

மிகச் சிறந்தவர்களும் கூட உச்சத்திலேயே எப்போதும் நிலையாக நிற்பதில்லை. (விளையாட்டில்) வல்லநர்கள் வயதான பின்பு வெளியேற்றப் பட்டு விடுகின்றார்கள். ஒரு ஆண்டில் உலக அழகியென்று கருதப்படும் பெண் அடுத்த ஆண்டின் உலக அழகியால் இடம் மாற்றப்பட்டு விடுகின்றாள். ஒரு நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அலுவலருக்கு

விருந்தொன்றும் கைக்கடிகாரம் ஒன்றும் தரப்பட்டு, வெளியில் வேலை தேடும்படி விட்டுவிடப்படுகின்றார். இன்றைய நாளின் இதய நாயகர்களும் நாயகிகளும் நாளைய தினத்தின் புதிய நட்சத்திரங்களால் இடம் மாற்றப்பட்டு விடுகின்றார்கள்.

தாவீதுக்கு, வெற்றி என்பது அன்றாடம் தொடர்ந்து (மல்யுத்தப்) போராட்டம் நடத்திய விஷயமாக இருந்ததேயன்றி, அவர் அதை ஒரு கேடயப் பெட்டியினுள் போட்டு வைத்திருந்து தமது எஞ்சிய வாழ்நாள் முழுவதிலும் அதை மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருந்த விஷயமாக இருந்ததில்லை. அவர் வெற்றி கொண்டிருந்த மக்கள், மீண்டும் எழும்பி அவரது வாழ்வைத் துக்கத்தில் ஆழ்த்த விரும்பினார்கள். ஏற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியிராதவைகளாகி மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டியவைகளாயின. ஒரு மணி நேரம் பகுத்துணர்வற்றிருத்தல் - ஒரு சில நிமிடங்கள் வசப்படுத்தப்படாத இச்சை - தாவீதைக் கோபுரத்தில் இருந்து தள்ளி அவரது வாழ்வை இதய வேதனைகளால் நிரப்பிற்று. வாழ்வைப் போலவே வெற்றியும் கூட, "கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" (யாக். 4:14).

உங்கள் வாழ்வில் ஒரு அளவுக்கு வெற்றியைக் கொடுப்பது உங்கள் தகுதிக்குப் பொருத்தம் என்று கர்த்தர் கண்டிருந்தால், அதை உங்களால் முடிகின்றபோதே மகிழ்வுடன் அனுபவியுங்கள், ஆனால் அந்த வெற்றி ஜன்னல் வழியே பறந்து போய்விடும்போது, நீங்களும் அதே ஜன்னல் வழியே குதித்து ஓடும்படி சோதிக்கப்படாதவாறு உங்கள் எதிர்நோக்கு களைக் காத்துக் கொள்ளுங்கள். "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று இறுதியில் கர்த்தர் கூறுவதைக் கேட்பதுதான் உண்மையில் பொருட்படுத்தப்பட வேண்டிய ஒரே வெற்றியாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (மத். 25:21).

***(5) உங்கள் காயப்படக் கூடிய தன்மையை மறவாதீர்கள்.***

தாவீதின் வெற்றியில் பெரும்பான்மையானவற்றை, ஒரே இரவில் ஒன்றுமற்றதாக்கி விட்ட நிகழ்ச்சி ஒன்றைப் பற்றிய எதிர்பார்ப்பு இல்லாமல் நான் இந்தப் பாடத்தை முடிக்க இயலாது. ஒரு முறை ஒரு பேச்சாளர்,[51] மிகவும் வெற்றிகரமான மக்கள் பின்வரும் நான்கு விஷயங்களில் ஏதாவது ஒன்றினால் விழுந்து போகின்றார்கள் என்று கூறினார்: ‘‘வெள்ளி’’, "சோம்பேறித்தனம்", "பாலுறவு விஷயம்", அல்லது "சுயம்" [இவை நான்கும் ஆங்கிலத்தில் நான்கு "s" கள் என்று கூறப்படுகின்றன, அவையாவன: "silver," "sloth," "sex," or "self"]. வெள்ளி என்பது தாவீதுக்கு முக்கிய சோதனையாக இருந்ததில்லை, ஆனால் மற்ற மூன்றும் அவரை ஏறக்குறைய அழித்தே விட்டன. தாவீது பரிவிரக்கம் கொண்ட மனிதராயிருந்தார். அவர் கர்த்தரைத் துதிக்கையில், கர்த்தருடைய யுத்தத்தை நடத்துகையில், அல்லது எதிர்காலத்திற்கென்று பெரிய திட்டங்கள் தீட்டுகையில் இது அவருக்குப் பாராட்டக் கூடியதாகவே இருந்தது. ஆயினும் ஒரு அழகிய பெண்ணின் விஷயத்தில் அவரது பலமே பலவீனமாயிற்று. ஒரு நாள் மாலைப் பொழுதில் சோம்பேறித்தனமும், பாலுறவு விஷயத்தின் சோதனையும் மற்றும்

சுயநலமும் ஒன்றுகூடிக் கவிந்தபோது, தாவீது இராஜ்யம் முழுவதிலும் எதிரொலித்த பெரும் வீழ்ச்சியில் விழுந்தார்.

தாவீது தமது காயப்படக்கூடிய தன்மைபற்றி போதுமான அளவுக்கு அறிந்திருக்கவில்லை, அல்லது அறிந்திருப்பினும் அவர் தம்மை (அதிலிருந்து) பாதுகாத்துக்கொள்ளப் போதுமான அளவுக்கு முன்னெச்சரிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. யாக்கோபு, ''அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' (யாக். 1:14) என்று எச்சரித்தார். நாம் ஒவ்வொருவரும் காயப்படக்கூடியவர்களா யிருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் நமது சொந்தமான பலவீனப் பகுதிகளை உடையவர்களாயிருக்கின்றோம். என் பலவீனங்கள் உங்கள் பலவீனங்களாயிருக்க வேண்டிய அவசியம் இல்லை, அல்லது உங்கள் பலவீனங்கள் என் பலவீனங்களாயிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொருவரும் சோதனைக்கான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காகத் தமது பலவீனங்கள்பற்றி அறிந்திருப்பது அவசியமாகின்றது. ஒரு விஷயம் நிச்சயமானதாக உள்ளது: உங்கள் பலவீனப் பகுதியைச் சாத்தான் நன்கு அறிந்துள்ளான், அவற்றைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள அவன் எல்லா வழிகளிலும் முயற்சி செய்வான்.

உங்களின் காயப்படக்கூடிய (பலவீனமான) பகுதிகளைக் கண்டு பிடித்தல் பற்றி நீங்கள் இதுவரை ஆத்தும - ஆய்வு செய்யாதிருந்தால், இன்றே அதைச் செய்யுங்கள்; பின்பு அந்தப் பகுதிகளில் சோதனையை எவ்வாறு நீங்கள் தவிர்க்க முடியும் என்பதை முடிவு செய்யுங்கள்.

## முடிவுரை

தங்கப் பதக்கங்களைப் பெறுபவர்கள், மிக உயர்ந்த வருவாயை ஈட்டுகின்றவர்கள் அல்லது குமுதம் பத்திரிகையில் தங்கள் புகைப்படங்கள் பிரசுரிக்கப்படுபவர்களைப் பற்றி மட்டும் நாம் பேசிக் கொண்டிருக்க வில்லை. நாம் இங்கு இருக்கின்றோம், நமது உடலில் உடைகள் உள்ளன, மற்றும் நாம் சுவாசித்துக் கொண்டிருக்கின்றோம் என்ற உண்மைகளே, தேவன் நமக்கு வெற்றியைக் கொடுத்துள்ளார் என்று அறிவிக்கின்றன. தாவீதின் வெற்றிகளில் இருந்து நாம் (பின்வரும் பாடத்தைக்) கற்றுக் கொள்வோமாக: ஒரு புறத்தில் தேவனுக்கு மகிமை செலுத்த வேண்டும், மறுபுறத்தில் வெற்றி கொண்டுவரக்கூடிய பள்ளங்களில் விழுவதைத் தவிர்க்க வேண்டும்.

இயேசு ஒருமுறை தம்முடைய சீஷர்களிடத்தில் பின்வரும் கேள்வி யைக் கொண்டு அறைகூவல் விடுத்தார்: "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனு க்கு லாபம் என்ன?'' (மத். 16:26). இயேசுவின் இந்தக் கேள்வியைப் பின்வருமாறு நாம் விவரித்தால், இந்த வசனப்பகுதிக்கு நாம் அநீதி எதுவும் செய்வதில்லை என்றே நான் நினைக்கின்றேன்: மனுஷன் உலகம் முழுவதை யும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் திருமண வாழ்வை நஷ்டப்

படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? ஒரு பெண், உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் சொந்தப் பிள்ளைகளை நஷ்டப் படுத்தினால் அவளுக்கு லாபம் என்ன? ஒரு மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் பண்பை/ஒழுக்கத்தை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? ஒரு பெண், உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், நன்மை செய்வதினால் தனக்குண்டாகும் செல்வாக்கை நஷ்டப்படுத்தினால் அவளுக்கு லாபம் என்ன? இந்தக் கேள்விகள் யாவற்றுக்கும் பதில் ஒரே மாதிரியானதாகவே உள்ளது: லாபம் எதுவுமே இல்லை. உங்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளதை நீங்கள் இழந்துபோனால், நீங்கள் இவ்வுலகில் மாபெரும் வெற்றியாளராயிருக்க முடியும், அதே வேளையில் மிக மாபெரும் தோல்வியாளராகவும் இருப்பீர்கள்.

---

## பிரசங்கக் குறிப்புகள்

மேவிபோசேத்தின் வரலாறு இருதயத்தைத் தொடக்கூடியதாக உள்ளது; இது ஊனமுற்ற தன்மைகள் - அத்துடன் ஊனமுற்றவர்களிடத்தில் நாம் கொண்டிருக்க வேண்டிய எண்ணப்போக்கு ஆகியவை பற்றிய பாடம் ஒன்றிற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட முடியும்.

இந்த வரலாற்றை, கிருபையினாலே இரட்சிப்பு என்ற பாடத்தைப் போதிக்கவும் பயன்படுத்தலாம். அந்த இளம் மனிதனை (தனிப்பட்ட மதிப்பினால் இன்றி, யோனத்தான் தாவீதுக்குச் செய்திருந்தவற்றினி மித்தமாக) தாவீது நடத்திய முறைமையையும், நம்மை (நமது சுய தகுதியினால் இன்றி, இயேசு செய்துள்ளவற்றினிமித்தமாக) தேவன் நடத்துகின்ற முறைமை பற்றியும் ஒப்பிடுங்கள்.

---

குறிப்புகள்

[1]அதிகாரம் 8ன் தொடக்க வார்த்தைகள் அநேகமாக நாள் வரிசை அட்ட வணையில் உள்ளவைகளாய் இருப்பதில்லை, ஆனால் அவை ஒரு புதிய தலைப்புக் குக் கடந்து செல்வதற்கான பாலம் போன்ற சொற்றொடராக உள்ளன. [2]KJV யில் ன்மற்றும் தமிழில்தி எபிரெய மொழியின் நேர்ப் பொருள் காணப்படுகிறது: “மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டான்.” “மேத்தேக் அம்மா” என்பது “தாய் நகரின் கடிவாளம்” என்ற நேரடி அர்த்தம் உடையதாகும் (ASV யைக் காணவும்). இவ்விதமாக, தாவீது “தாய் ன்பிரதானதி நகரின் கடிவாளத்தை ன்கட்டுப்பாட்டைதி தம் வசம் எடுத்துக் கொண்டார்.’’ உலகின் அந்தப் பாகத்தில் “தாய்’’ என்பது இன்னமும் ‘‘பிரதான’’ அல்லது ‘‘மிகப் பெரிய’’ என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது: “யுத்தங்களுக்கெல்லாம் தாய்.” [3]நாளாகமத்தின் எழுத்தாளர், காத் நகரமே அந்த “தாய் நகரம்” என்று நமக்குக் கூறுகின்றார்: “தாவீது … அதின் கிராமங்களையும் … பிடித்துக் கொண்டான்” (1 நாளா. 18:1). [4]இந்த யுத்தங்கள் எப்போது நடைபெற்றன என்பதை நாம் யூகித்தறிய மட்டுமே முடியும்.

*சிலர், 2 சாமுவேல் 21ன் நான்கு யுத்தங்களும், தாவீது தேடப்பட்டவராக அலைந்து கொண்டிருந்த காலத்தில் அல்லது தாவீது யூதாவின் மேல் ஏழரை ஆண்டுகள் ஆட்சி செய்த காலத்தில் - அதாவது இவைகள், 2 சாமுவேல் 5ன் தீர்மான மான யுத்தங்களுக்கும் 2 சாமுவேல் 8:1ன் திட்டவட்டமான வார்த்தைகளுக்கும் முன்னதாக - நடந்திருக்கலாம் என்று நினைக்கின்றார்கள். மற்றவர்கள், இவைகள் தாவீதின் வாழ்வின் பிற்பகுதியில் பெலிஸ்தர்கள் அவ்வப்போது இஸ்ரவேலுக்குத் தொந்தரவு கொடுக்கத் தொடர்ந்த வேளையில் நடந்தன என்று நினைக்கின்றார்கள் - இது, தாவீது ஏன் "விடாய்த்துப் போனார்" (2 சாமு. 21:15) என்பதை விளக்கப் படுத்தலாம். [5]இந்த ஈட்டி கோலியாத்தினுடையது போல் அவ்வளவு பெரியதல்ல, ஆனால் இதன் தலைப்பகுதி ஒரு சுத்தியலைக் காட்டிலும் அதிக எடை கொண்டதாக இருந்தது! [6]இந்த இராட்சதனின் பெயர் கோலியாத் என்று, 2 சாமுவேல் 21:19 கூறுகின்றது. இவன் கோலியாத்தின் சகோதரனான லாகேமி என்று 1 நாளாகமம் 20:5 கூறுகின்றது. ''சகோதரனான'' என்பது 2 சாமுவேல் வசனப்பகுதியில் தற்செயலாகத் தவற விடப்பட்டது என்று யூகித்த லுமூா அதை உட்செருகுகின்றது. ஆயினும் "கோலியாத்" என்பது ஒரு குடும்பப் பெயராக இருந்திருக்கவோ அல்லது, லாகேமிக்கு கோலியாத் என்று கருதப்படத் தக்க ஒரு சகோதரன் இருந்திருக்கவோ சாத்தியக் கூறு உண்டு. சிலர், கோலியாத் என்ற பெயர் கொண்ட ஒரு இராட்சதனை, தாவீதைத் தவிர வேறு யாரோ ஒருவர் கொன்று போட்டிருக்கச் சாத்தியமுண்டு என்று கருதி, ''எல்க்கானான்'' என்பது தாவீதின் மறுபெயர் என்று ஆலோசிக்கின்றார்கள். ஆனால் எல்க்கானாவின் தந்தை யாவீரு என்ற பெயர் கொண்டவராயிருந்தார் என்பதாலும் (1 நாளா. 20:5), இவர் ன்எல்க்கானாதி தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவர் என்று பட்டியலிடப்பட்டிருந்தார் என்பதாலும் (2 சாமு. 23:24) இக்கருத்து சரியானதா யிருக்க முடியாது. இந்த நிகழ்ச்சியானது தாவீது கோலியாத்தை எதிர்த்து நின்ற நிகழ்ச்சி நடந்து நீண்ட நாட்களுக்குப் பின்பு நடைபெற்றது என்பது உறுதி. [7]கூடா ஒழுக்க உறவின் காரணமாக மோவாபிய சந்ததி தோன்றிற்று (இ.வ. ஆதி. 19:37). [8]அம்மோனியர்கள் ஒரு விதிவிலக்காக இருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது (பின்னால் வரும் 2 சாமு. 12:31ன் மீதான குறிப்புகளைக் காணவும்). [9]போர்வீரர்களிலா, ஆண்களிலா அல்லது மொத்த ஜனத்தொகையிலுமா, எவர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள் என்பதை வேத வசனப் பகுதி தெளிவாய்க் கூறுவதில்லை. [10]*Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Commentary on the Whole Bible,* rev. ed. (Grand Rapids, Mich.: Zondervan Publishing Co., 1961), 233.

*[11]2 சாமுவேல் 8:12ஐக் கவனிக்கவும். 2 சாமுவேல் 8-12 பகுதி, அம்மோனியர் களின் மீது தாவீதின் வெற்றிகள் பற்றிய விவரங்களைத் தருகின்றது. [12]அம்மோனியர்களும் கூட ஒழுக்க உறவின் காரணமாகத் தோன்றிய சந்ததியர் களாகவே இருந்தார்கள் (இ.வ. ஆதி. 19:38). [13]நாளாகமங்களில் உள்ள இணை வசனப்பகுதிகள் வாசிக்கப்படும்போது எண்ணிக்கை, பெயர்கள் முதலியவற்றில் மாறுபாடுகள் காணப்படும். எண்ணிக்கை கணக்கிடுவதில் மாறுபட்ட முறைமைகள் பயன்படுத்தப்பட்டனவா? ஒரே மக்களுக்கு மற்றும் இடங்களுக்கு மாறுபட்ட பெயர்கள் பயன்படுத்தப்பட்டனவா? ஆண்டுகள் கடந்தபோது வசனப்பகுதிகளில் ஒன்று தற்செயலாக மாற்றப்பட்டதா? இந்தக் கேள்விகளுக்கு நாம் பதில் தர இயலாது. நமது நோக்கங்களுக்காக, நாம் 2 சாமுவேலில் தரப்பட்டுள்ள எண்ணிக்கைகளையும் (பட்டப்) பெயர்களையும் பொதுவாகப் பயன்படுத்துவோம். [14]அவர் குதிரையின் பின்னந்தொடையில் இருந்த நரம்புகளை வெட்டி, அவற்றை யுத்தத்திற்குப் பயன்படாதபடி "முடமாக்கினார்." விலங்குகளின் உரிமை பற்றிப் பேசும் இந்த நாட்களில், இது இரக்கமற்றதாக ஒலிக்கலாம், ஆனால் அவற்றைக்*

கொல்வதைக் காட்டிலும் இது மென்மையானதாகவே உள்ளது. தாவீது அவைகளைப் பயன்படுத்தியது மிகக் குறைவானதாகவே இருந்தது (அரசர்கள் “அநேக குதிரைகளை” சம்பாதிக்கக் கூடாது என்று தேவன் கூறியிருந்தார் ன்உபா. 17:16தி, அத்துடன் இரதங்கள் இஸ்ரவேல் மலைநாட்டில் பயன்படாதவையாயிருந்தன), அவரின் விரோதிகள் அவற்றை யுத்தத்தில் மீண்டும் பயன்படுத்துவதை அவர் விரும்பவில்லை. தாவீது தமக்கு நூறு இரதங்களுக்குப் போதிய அளவு வைத்திருந்தார்; அது ஏன் என்று நமக்குத் தெரியவில்லை (சங். 20:7ல் தாவீதின் சொந்த வார்த்தைகளைக் கவனிக்கவும்). இவ்வாறு செய்ததில் அவர் அநேகமாக உபாகமம் 17:16ன் ஆவியை மீறியிருந்திருப்பார். (ஒருவேளை, இது அப்சலோம் தமக்கென்று இரதத்தையும் குதிரைகளையும் ஈட்டிய வேளையாயிருந்திருக்கும் ன் 2 சாமு. 15:1தி; பதிவேட்டின்படி, இராஜரீகக் குடும்பத்தில் இரதத்தை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் அப்சலோமே ஆவார்.) [15]ஹிபுறீயயின் தொடக்க காலப் பதிப்புகளில் ‘‘சீரியர்’’ என்றுள்ளது; பிற்காலப் பதிப்புகளில் ‘‘அரமியர்கள்’’ என்றுள்ளது, இது மூல வசனத்திற்கு நெருங்கிய அர்த்தம் கொண்டுள்ளது. ‘‘அரமியர்கள்’’ என்ற சொற்பதமானது பொதுவாக சீரியர்களைக் குறித்தது. சோபாவின் அரசாட்சியில் இருந்தவர்களும் அரமியர்கள் அல்லது சீரியர்களாகவே இருந்தார்கள் (2 சாமு. 10:6ஐக் காணவும்). [16]ஆமாத் என்ற நகரானது தமஸ்குவில் இருந்து வடக்கில் சுமார் நூறு மைல்கள் தொலைவில் அமைந்திருந்தது. [17]இது, ஆமாத்தின் அரசன் தாவீதுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டு, தன்னைத் தாவீதின் ஆளுகையின் கீழ் உட்படுத்திக் கொண்டதைச் சுட்டிக் காண்பிக்கின்றது. [18]இதற்கு முன்பே தாவீது அமலேக்கியர்களைத் தோற்கடித்திருந்தார் (1 சாமு. 30). [19]சங்கீதம் 60ன் தொடக்கத்தில் உள்ள குறிப்புகள் யோவாபின் வெற்றியைப் பற்றி எடுத்துரைக்கின்றது. நாளாகமங்களின் எழுத்தாளர் இதை யோவாபின் சகோதரரான அபிசாய்க்கு உரித்தாக்கினார் (1 நாளா. 18:12). இது சிலரைக் கவலை கொள்ள வைக்கின்றது, ஆனால் யோவாபையும் அபிசாயியையும் பொறுப்பாளர் களாகக் கொண்டு தாவீதின் படைதான் யுத்தம் செய்தது, மற்றும் அபிசாய் இந்தக் குறிப்பட்ட தாக்குதலில் வெற்றியைத் தீர்மானித்தார். [20]செப்துவஜிந்த், சீரியாக் பதிப்பு மற்றும் பதினோரு எபிரெயக் கைப்பிரதிகள் ஆகியவற்றில், 2 சாமுவேல் 8:13ல் “ஏதோமியர்கள்” என்று உள்ளது.

[21]இதைக் குறித்துக் கொள்ளுங்கள். இதுவே அப்சலோம் மக்களின் இருதயங்களை ஆதாயப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்திய தாக்குதலின் கருத்தாயிருந்தது. [22]1 நாளாகமம் 16:40. சாதோக்கு பெட்டியைக் கவனிக்கும் கட்டளை பெற்றார் (2 சாமு. 15:24-29). 1 நாளாகமம் 6:3-8, 50-53ன்படி சாதோக்கு ஆரோனின் நேரடியான சந்ததியில் வந்தவராயிருந்தார் (1 நாளா. 24:3ஐயும் காணவும்). [23]அகிமெலேக்கும் ஆரோனின் சந்ததியாராகவே இருந்தார், ஆனால் இவர் வேறொரு கிளையில் வந்தவராயிருந்தார். 2 சாமுவேல் 8:17ம் வசனத்தை “அபியத்தாரின் குமாரன் அகிமெலேக்கு” என்று வாசிக்க வேண்டுமா அல்லது “அகிமெலேக்கின் குமாரன் அபியத்தார்” என்று வாசிக்க வேண்டுமா என்பதில் கொஞ்சம் குழப்பம் உள்ளது. ஆசாரியர்கள் அனைவரையும் சவுல் கொல்லுவித்த பின்பு, அகிமெலேக்கின் குமாரனான அபியத்தார், வனாந்தரத்தில் தாவீதுடன் சேர்ந்து கொண்டிருந்தார் (1 சாமு. 22:20). இந்த வேளையிலிருந்து, சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியர்கள் என்று பட்டியலிடப்படுகின்றார்கள் (2 சாமு. 17:15; 20:25). தாவீதிடத்தில் அடைக்கலம் அடைந்த அபியத்தாருக்கு அகிமெலேக்கு என்ற பெயர் கொண்ட ஒரு மகன் இருந்திருக்கவும், அவர் அபியத்தார் என்ற பெயர் கொண்ட ஒரு மகனைப் பெற்றிருக்கவும், இவர்கள் யாவரும் ஆசாரியர்களாய் ஊழியம் செய்திருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. அபியத்தார் என்பது அகிமெலேக்கு என்ற பெயருக்கு

மாற்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. இந்த விஷயத்தைத் தீர்வுக்குக் கொண்டுவர நமக்குப் போதிய தகவல் இல்லை. [24]உள்ளினப் போட்டியைத் தவிர்ப்பதற்காகத் தாவீது அயல்நாட்டுக் காவலர்களைக் கூலிக்கு அமர்த்தியிருக்கலாம். [25]2 சாமுவேல் 8:18, எபிரெய மூலமொழியில் தாவீதின் குமாரர்கள் ''ஆசாரியர் களாய்'' இருந்தார்கள் என்று கூறுகின்றது. இவர்கள் லேவிகோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிராதபடியாலும் நாளாகமங்களின் எழுத்தாளர் மாறுபட்ட வார்த்தையைப் பயன்படுத்துவதாலும், இவர்கள் சாதாரணக் கருத்தமைவில் ஆசாரியர்களாயிருக்கவில்லை. 2 சாமுவேல் 8ல், லுமூா இவர்களைப் "பிரதான அதிபதிகள்" என்று அழைக்கின்றது; ஹிணூா இவர்களை ''இராஜரீக ஆலோசனையாளர் கள்'' என்று அழைக்கின்றது. [26]யற்ஷெிமிலிஜ ஶீலிக்ஷ௴க்ஷ௴துழிஜ, ஶீலிதுதுளஜமிழிஷெிதீ லிஜ ரீளஉலிஜ ரீழிதுற்ளயி (புணுஷ்யிளஜள, வீளமு.: புளீஷ் ஷீணஷெிளவிவி, 1992), 114. [27]2 சாமுவேல் 21ன் நிகழ்ச்சிகள் 2 சாமுவேல் 9ன் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு நடந்திருந்தால், சவுலின் மற்ற சந்ததியினர் இன்னமும் உயிருடன் இருந்தார்கள் என்றாகின்றது (2 சாமு. 21:8ஐக் கவனிக்கவும்). ஒருவேளை சீபா, தாவீதின் மூலக்கூற்றான "யோனத்தான் நிமித்தம் என்னால் தயவு பெறத்தக்கவன்" என்பதை அறிந்தவராக, யோனத்தானின் வாரிசை மட்டும் குறிப்பிட்டு இருந்திருக்கலாம். [28]1 நாளாகமம் 8:34ஐக் காணவும். "மேரிப்-பால்" (அல்லது "மேரி-பால்") என்ற பெயரின் அர்த்தமானது, "பால்" என்பது "கர்த்தர்" என்று மட்டும் அர்த்தம் கொள்ளுகின்றதா அல்லது இது புற இனத்தாரின் தெய்வத்தைக் குறிக்கின்றதா என்பதைச் சார்ந்ததாக உள்ளது. இது "பாகாலின் எதிரி" அல்லது "கர்த்தரால் நேசிக்கப்படுபவர்" என்று அர்த்தப்பட முடியும். "பால்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக 1, 2 சாமுவேல் புத்தகங்களின் எழுத்தாளர் ''வெட்கம்'' என்பதற்கான எபிரெய வார்த்தையை இங்கு பதிலிடையாகப் பயன் படுத்தியிருக்கலாம் ("இஸ்போசேத்" என்ற பெயர் பற்றிய முந்திய குறிப்பைக் காணவும்). ''மேவிபோசேத்'' என்பது ''வெட்கத்தைச் சிதறடிப்பவர்" அல்லது "வெட்கத்தை எதிர்ப்பவர்" என்று அர்த்தப்படுகின்றது. [29]மாகீர் என்பவர் சவுலுக்கும் அவரது வீட்டாருக்கும் பற்றுறுதியுடன் ஆதரவளித்தவர் என்பது தெளிவு. மேவிபோசேத் மீது தாவீது தயவு காண்பித்த பின்பு, மாகீர் தாவீதைப் பின்பற்றுபவராகி அவரை ஆதரித்தார் (2 சாமு. 17:27-29). [30]லோதேபார் என்ற நகர் இருந்த இடம் எது என்று மிகச் சரியாக அறியப்பட வில்லை. இது இஸ்போசேத்தின் தலைநகராயிருந்த மகனாயீம் என்ற நகரில் இருந்து வடக்கு-வடமேற்கில் சுமார் இருபது மைல்கள் தொலைவில் இருந்தது என்று சிலர் நினைக்கின்றார்கள்.

[31]மேவிபோசேத்தின் மகனுக்கு மீகா என்று பெயரிடப்பட்டது (2 சாமு. 9:12). மீகாவின் வழித்தோன்றல்கள் இஸ்ரவேல் நாட்டில் புகழ்மிக்கவர்களாயினர் (1 நாளா. 8:34-40; 9:40-44 ஆகிய வசனங்களைக் காணவும்). [32]1 நாளாகமம் 3:5ல் பத்சேபாளின் தந்தையும் அம்மியேல் என்று அழைக்கப் பட்டதால், இவர் அதே அம்மியேலா இல்லையா என்பது பற்றியும், மாகீரும் பத்சேபாளும் சகோதரர் - சகோதரியாக இருந்தார்களா இல்லையா என்பது பற்றியும் சில யூகங்கள் நிலவியுள்ளன - இவ்விதமாக மாகீர் பின்னாட்களில் தாவீதின் மைத்துனர் ஆனார். [33]தாவீது இவரை பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார் (2 சாமு. 9:6). மேவிபோசேத்து அறிவிக்கப்பட்டிருந்ததினால், இது, தாவீது உண்மையில் இவர் தமது நண்பரின் மகன்தானா என்று நிச்சயமாய் அறியாததினால் இவ்வாறு அழைத்தார் என்று அர்த்தப்படுத்தியதாகவே நான் நினைக்கின்றேன். [34]ஒருவர் தரையில் முகங்குப்புற விழுந்து பணிதல் என்பது இராஜ சமூகத்தில் வருதலின் வழக்கமான வகையாயிருந்தது. [35]ஒருவர் தம்மை நாய் என்று குறிப்பிடுதல் என்பது சுயமதிப்பைக்

*குறைத்துக் கொள்ளும் விளக்கச் சொல்லாயிருந்தது. சவுலுக்கு முன்பாகத் தாவீது தம்மை விவரிக்க இதே சொற்பதத்தைப் பயன்படுத்தியிருந்தார் (1 சாமு. 24:14).* [36]*2 சாமுவேல் 9:9-11. சீபா இதை வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொண்டார் என்று, பின்னாளைய (2 சாமு. 16:1-4ன்) நிகழ்ச்சியின் அடிப்படையில் நான் நம்புகின்றேன்.* [37]*மேவிபோசேத்தின் வரலாறு இன்னும் முடிவடையாதிருந்தது. இன்னொரு வேளையில் தாவீது இவரது உயிரைத் தப்புவித்தார் (2 சாமு. 21:7, 8). தாவீது அப்சலோமிடம் இருந்து தப்பி ஓடுகையில் வரலாற்றில் மீண்டும் மேவிபோசேத் வந்தார் (2 சாமு. 16:1-4; 19:24-30).* [38]*மீண்டுமாக இது நாள் வரிசைக் கூற்றாயிராமல் அநேகமாக, ஒரு இணைப்புச் சொற்றொடராகவே இருக்கலாம்.* [39]*நாகஸ், சவுலுக்கு விரோதியாயிருந்தபடியால் (1 சாமு. 11:1-11), சவுலுக்கு எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் ஒருவேளை தாவீதுக்கு தயவுகாட்டியிருக்கக் கூடும்.* [40]*ரப்பா என்பது 2 சாமுவேல் 10:3ல் குறிப்பிடப்பட்ட "பட்டணம்" என்பதாகும். ரப்பா யோர்தான் நதிக்குக் கிழக்கில், எரிகோ நகரின் நேர் கிழக்காக சுமார் இருபத்து மூன்று மைல்கள் தொலைவில் இருந்தது. இன்றைய நாட்களில் இது ஜோர்டான் நாட்டின் தலைநகரான அம்மான் என்று அறியப்படுகின்றது.*

[41]*இவ்வாறு கூலி பொருத்துவதற்கு "ஆயிரம் தாலந்து வெள்ளி" செலவானதாக (1 நாளா. 19:6) நாளாகமத்தின் எழுத்தாளர் கூறுகின்றார் - இது ஏறக்குறைய நாற்பத்திரண்டு கோடி ரூபாய்க்குச் சமமான தொகையாகும்!* [42]*இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாகா மற்றும் தோப் என்ற மற்ற நாடுகள் அம்மோன் நாட்டின் அண்டை நாடுகளாக இருந்தன.* [43]*சோபாவின் அரசனான ஆதாரேசர், தீமையைத் தூண்டுபவர்களில் முக்கியமானவனாயிருந்தான் (2 சாமு. 10:16, 19). அத்தியாயம் 8ல் (வ. 3, 5, 7-10ல்) தாவீது ஆதாரேசருடன் யுத்தம் செய்திருந்ததை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அத்தியாயம் 8 மற்றும் 10 ஆகியவற்றில் குறிப்பிடப்படும் யுத்தங்களுக்கிடையில் ஏதேனும் தொடர்பு உண்டா என்பது பற்றி நாம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நம்மிடம் போதிய தகவல் இல்லை. அத்தியாயம் 10ன் யுத்தங்கள் முன்னதாக நடந்ததாகச் சிலர் நினைக்கின்றார்கள்; இன்னும் சிலர் அவை ஒரே யுத்தத்தின் பகுதிகள் என்று நினைக்கின்றார்கள்.* [44]*இது, ''சீரியர் தாவீதைச் சேவித்து, அவனுக்குக் கப்பங்கட்டினார்கள்'' என்று கூறுகின்ற 2 சாமுவேல் 8:5 உடன் பிணைக்கப்பட்டதாயிருக்கலாம்.* [45]*2 சாமுவேல் 12:27.* NASB, KJV *மற்றும்* RSV *ஆகிய மொழிபெயர்ப்புகளில் ''தண்ணீர்களின் நகரம்'' என்றுள்ளது.* NIV *யில் இது ''நகரத்தின் தண்ணீர் அளிப்பிடம்'' என்றுள்ளது.* [46]*பொதுவாக, ஒவ்வொரு நகரிலும் கொள்ளையிடப்படுபவைகள், அதைக் கைப்பற்றிய நபருக்கே உரிமையாகும். யோவாபைத் தாவீது கனவீனப்படுத்தி யிருந்தும்கூட, இந்த நிகழ்ச்சியில் யோவாப் தாவீதின் மீது காண்பித்த உக்கிரமான பற்றுறுதியை நாம் காண்கின்றோம்.* [47]*"ராஜா" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்பதமானது அம்மோனி யர்களின் தெய்வத்தைக் குறிப்பதாகவும் இருக்க முடியும். ஒரு தாலந்து பொன் என்பது 45 முதல் 55 கிலோ வரையிலான எடைகொண்டது என்பதால், கிரீடம் என்பது ஒரு விக்கிரகத்தின் தலைமேல் இருந்தது என்று பலர் நினைக்கின்றார்கள். ஒருவேளை அப்படியிருந்திருக்கலாம், ஆனால் அப்படிப்பட்ட கிரீடங்கள் காட்சிக்கு வைக்கப்படலாமே தவிர, சூட முடியாது என்பதை நினைவில் வையுங்கள். (குறிப்பு: இந்தக் கிரீடம் இன்றைய நாட்களில் குறைந்தது பத்துகோடி ரூபாய் மதிப்புள்ளதாகும்!)* [48]NASB *மொழிபெயர்ப்பு மூலமொழி வசனத்திற்கு மிகவும் நெருங்கிய அர்த்தம் கொண்டுள்ளது. ஆனால் இது இந்த எழுத்தாளர், அம்மோனியர்களை அடிமை களாக்கியது பற்றிக் கூறினாரா அல்லது அவர்களை சித்தரவதை செய்தது பற்றிக் கூறினாரா என்பது பற்றிய கேள்வியை அப்படியே விட்டு வைக்கின்றது.*

*அம்மோனியர்களை அடிமைகளாக்கியது பற்றிக் கூறினாரா அல்லது அவர்களை சித்தரவதை செய்தது பற்றிக் கூறினாரா என்பது பற்றிய கேள்வியை அப்படியே விட்டு வைக்கின்றது. அம்மோனிய இராஜ குடும்பங்களில் ஒன்று பின்னாட்களில் தாவீதுக்கு உதவியிருந்ததால் (2 சாமு. 17:27), தாவீது அவர்களைச் சித்தரவதை செய்திருப்பார் என்று நான் நம்பவில்லை, எனவே இவ்விடத்தில் நான் ஹிணூரயின் தரவழைப்பைப் பயன்படுத்துகின்றேன். ஆயினும், தாவீது (அம்மோனியர்களின் ஒன்றுவிட்ட சகோதரர்களான) மோவாபியரை நடத்திய விதத்தையும், அம்மோனியர்களின் அரசனுக்கு அவர் தம் மனிதர்களால் செலுத்தப்பட்ட அவமானத்தையும் கவனித்துப் பார்க்கையில், தாவீது அம்மோனியர்களைச் சித்தரவதை செய்திருக்கக்கூடிய சாத்தியக்கூறு நிலவுகின்றது. [49]இங்கு எகிப்தின் நதி என்று குறிப்பிடப்படுவது நைல் நதியல்ல. வரைபடத்தில் காணவும். [50]தாவீதின் ஆணை கர்த்தருக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டது (1 சாமு. 20:16, 17ஐக் காணவும்).*

*[51]இந்த பேச்சாளர் குறிப்பிடப்பட்டுள்ளார், ஆனால் இவர் பெயர் குறிப்பிடப் படவில்லை, இவ்விவரம் பின்வரும் புத்தகத்தில் காணப்படுகின்றது: ளீஜுழிஷெயிளவி யூ. நீழஷ்ஐ லியியி'வி விமிற் தீ ஆற்ஷ் ள, David: A Man After God's Own Heart* (Fullerton, Calif.: Insight for Living, 1988), 80.

